விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 பங்குனி 8 றஜப் 9 இதழ் 39

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-3-1986

# யாழ்ப்பாணத்தை நிர்வகிப்பது கஷ்டமாக உள்ளது

## பாராளுமன்றத்தில் அமைச்சர் லலித்

(கொழும்பு)

''வடக்கு, கிழக்கு இணைப்புக்குஎதிர்ப்புத் தெரிவிப்பதாக சகல கட்சிகளும் ஒன்ருக இணைந்து இந்தியாவுக்கும், தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், தீவிரவாதிகளுக்கும் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் எமது பலம் உறுதியானதாக இருக்கும்.''

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி இவ்வாறு பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினர்.

''கொழும்பிலிருந்து நிர்வாகம் செய்வதுபோல் வடக்கில் நிர்வாகம் செய்யமுடியாது. யாழ்ப்பாணம் தான் இன்று நிர்வகிக்கக்கஷ்டமாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தைவிட வவனியாவை நிர்வகிப்பது இலகு. வவனியாவைவிட திருகோணமலையை நிர்வகிப்பது இலகு, இப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டும் என்று எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனுல் அரசும் எதிர்கட்சிகளும் அந்தத்தீர்வு என்ன என்பதை ஏற்றுக் கொள்ளாமல், எப்படி அரசியல் தீர்வு காணமுடியும்? இந்தப் பிரச்னையை அரசியல் லாபம் சம்பாதிக்கும் பிரச்னையாக எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்கக் கூடாது'' என்று அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கூறினர். [ய-வா]

## தமிழகத்தில் 165 அகதிமுகாம்கள்

(சென்னை)

',1983-1985 வரை இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரம்காரணமாக ஒரு லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் தமிழ்நாடு வந்து பதினறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 165 அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர் என்று தமிழ்நாடு சட்ட மேலவையில் தமிழ்நாடு மறுவாழ்வுத் துறை அமைச்சர் திரு. ராமசாமி நேற்றுத் தெரிவித்தார்.

அகதிகளைப்பராமரிக்கும் முழுப்பணத்தையும் மத்திய அரசு தமிழக அரசுக்கு கொடுத்துள்ளது என்றும் அவர் கூறினர். (ச)

● 16 பேர் பலி! ● வீடுகள் தீக்கிரை! ● பலர் கைது!

# நெடுங்கேணி கிராமத்தில் நடந்த பயங்கரம்!

(ஏ. வி. மாணிக்கம்)

**வவனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமமொன்றைச் சுற்றிவளைத்த கறுப்புடை தரித்த ஆயுதப்படையினர்; அக்கிராமத்திலுள்ள வீடுகளை தீ மூட்டி எரித்தும், பலரைச் சுட்டுக்கொன்றும், பலரைக் கைது செய்தும், உடைமைகளைக் கொள்ளையடித்தும் அட்டகாசம் செய்ததாக வவனியா அரசாங்க அதிபருக்கும்,பிரஜைகள் குழுத் தலைவருக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.**

நெடுங்கேணி கிராமோதய சபைத் தலைவர் திரு. பீற்றர் பொன்கலன், சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து தப்பி ஓடி, மேற்குறிப்பிட்ட புகாரைத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணி தொடக்கம் நேற்று அதிகாலை5-00மணிவரை இந்த வன்முறைச் சம்பவங்கள்இடம் பெற்றனவாம்.

வவனியாவிலிருந்து 26மைல் தூரத்திலுள்ள நெடுங்கேணிக் கிராமத்தில், பசவியா செல்லும் பாதையில் ஈட்டிமுறிந்தான் கிராமத்திலுள்ள அப்பாவித் தமிழ் மக்களுக்கே இக்கதி நேர்ந்தது இப்படு கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கானேர்காடுகளுக்குள் ஓடித் தப்பித்துக்கொண்டார்கள்.

ஆறு ட்ரக்குகள், 2 கவச வண்டிகள், ஒரு ஜீப் வண்டி ஆகிய வாகனங்களில் வந்த சுமார் 300 கறுப்புடை தரித்த ஆயுதப்படையினர் இந்த வன்முறைச் சம்பவத்திலீடுபட்டதாக அவர் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

''ஈட்டிமுறிந்தான் கிராமத்தில் உள்ள 12 வீடுகள் நெடுங்கேணியிலுள்ள சின்னையா மயில்வாகனம் என்பவரது வீடும் முற்ருக எரிக்கப்பட்டுள்ளன. 25வயதுப் பெண் உட்பட 60 வயது வயோதிபர் வரை 16க்கு மேற்பட்டோர் சுட்டுக்கொல்லப் பட்டனர். இப்படி இறந்தவர்களுள் 7 பேரின் சடலங்களை தங்கள் வாகனத்தில் ஏற்றிச்சென்றுள்ளனராம்'' என்று தமது புகாரில் அவர்தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானவர்களுள் 9 பேரின் சடலம் இதுவரை அடையாளம்

(5ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி, இன்ரசிற்றி ரயில் சேவைபற்றி எவ்வித தகவலும் கிடைக்கவில்லை உன்று யாழ். ரயில் நிலையவட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

பரந்தனில் தகர்க்கப்பட்ட ரயில் பாதைவேலை பூர்த்தியாகும் நிலையில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## முல்லைத்தீவு வரும் திருமலை அகதிகள்

(முல்லைத்தீவு)

திருகோணமலைப்பகுதி கிராமங்களிலிருந்து நாற்பது குடும்பங்களைச்சேர்ந்த இருநூற்றுக்கும் அதிகமான அகதிகள் கடந்த 18ம் திகதி அதிகாலை கடல் மார்க்கமாக முல்லைத்தீவு வந்தடைந்தனர்.

அகதிகள் தற்பொழுது கள்ளப்பாட்டில் உள்ள ஆலயம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர். பொதுமக்களும், உதவி அரசாங்க அதிபரும் உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அகதிகளாக வந்தவர்களில் ஒரு முதியவரை எமது நிருபர் பேட்டிகண்டபொழுது! குச்ச வெளியிலுள்ள அகதிமுகாமில் தான் இருந்ததாகவும், 'தமிழ் ஈழ விடுதலைப்புலிகள்' என்ற பெயர் பொறிக்கப்பட்டபெனியன் அணிந்த ஆயுதப்படையினர் வந்து தங்களைத் தாக்கியதாகவும் பலர் கைது செய்யப்பட்டதாகவும் கூறினர்.

## பத்துலட்சம் ரூபா கொள்ளை!

(புலோலி)

கரணவாய் சோளங்கனில் உள்ள முந்திரிகைத்தோட்ட உரிமையாளரொருவரின் வீட்டில் நள்ளிரவுவேளையில் முகமூடிகள் அணிந்து துப்பாக்கிகள் சகிதம் வந்த இனந்தெரியாத கோஷ்டியொன்று தங்கநகைகள், ரொக்கப்பணம், பாவனைப்பொருட்கள் உட்பட பத்து லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை கே. தாமோதரம்பிள்ளை என்பவரின் வீட்டில் இக்கொள்ளை நடைபெற்றது.

## கோட்டைப் பகுதியில் நேற்று.

(யாழ்ப்பாணம்)

கோட்டையிலிருந்து நேற்றுக்காலை ஆயுதப்படையினர் வெளியேவந்ததினுல் நகரில் ஓரளவு பதற்றம் ஏற்பட்டது.

பண்ணைப் பகுதிக்குவந்தஆயுதப்படையினர் சிறிதுநேரத்தில் கோட்டைக்குத்திரும்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது: (க)

## பாக். கப்பல் கொழும்பு விஜயம்: பாரதம் மிகுந்த கவலை!

[கொழும்பு]

அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலான 'என்ரபிரைஸும்' வேறுஐந்துபடைக்கப்பல்களும் அண்மையில் பாகிஸ்தான், கராச்சித்துறைமுகத்துக்கு வந்தது குறித்து பாரதம் பெரும் கவலையடைவதாக வெளியுறவு அமைச்சர் திரு. பி. ஆர். பஹத் தெரிவித்துள்ளார்.

'என்டர்பிறைஸ்' கப்பலின் கராச்சி விஜயத்தையொட்டி இந்திய பாராளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட கவனயீர்ப்பு பிரேரணைக்குப்பதிலளித்துப்பேசுகையில் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பஹத் இதனைத்தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் நிலைமையுடன் தொடர்பற்றவகையில் பாகிஸ்தான் கடற்படைக்கு அமெரிக்கா கூடுதல் உதவி வழங்கிவருவதை இந்தியா கவனத்திற்கெடுத்துள்ளது. என்று கூறிய அவர்; ''சில துறை

(8-ம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்த முயற்சியை இந்தியா கைவிடாது

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னைக்குத்தீர்வுகாணும் மத்தியஸ்தத்தினை இந்தியா கைவிடாது என்று புதுடில்லி அரசவட்டாரங்களை ஆதாரங்காட்டி 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய வெளியுறவுச்செயலர் திரு ரொமேஷ் பண்டாரி இலங்கைப் பிரச்னைகள்தொடர்பான இந்தியப் பிரதமரின் விசேஷ ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார், எனவும் மேற்படி செய்தி கூறுகிறது.

இலங்கை அரசு ஆத்திரமூட்டக்கூடிய அறிக்கைகளை விடுத்தாலும், தமிழ்த்தேசியவாதத்தை ஒருதலைப்பட்சமாக நசுக்கமுயற்சி மேற்கொண்டாலும், இலங்கை இனப்பிரச்னையில் தான் ஏற்கனவே மேற்கொண்ட மத்தியஸ்த முயற்சியைக் கைவிடும் உச்தேசம் இந்தியாவுக்கு இல்லை எனவும் இச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## "எனது உயிருக்கு அச்சுறுத்தல்!"

### பிரதி அமைச்சர் கூறுகிறுர்

(கொழும்பு)

ஆயிரம்ரூபா போலி நோட்டு விவகாரத்தில் தீவிரவாதிகளும் சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இந்த விவகாரத்தில் எனது உயிருக்கும் அச்சுறுத்தல்கள் வந்துள்ளன. எதுவந்தாலும் நான் எனது கடமையைச் சரிவரச்செய்வேன்''.

பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சர் திரு. எம். பிரேமரத்தின நேற்று பாராளுமன்றத்தில இவ்வாறு கூறினர். [ய-வா]

## சபைக்கு வந்த 'புளட்' சஞ்சிகை

[கொழும்பு]

சென்னையில் 'புளட்' இயக்கத்தினுல் வெளியிடப்பட்ட'ஸ்பார்க்' ]1985] என்ற சஞ்சிகை பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவினுல் நேற்றுப் பாராளுமன்றக் கூட்டத்தில் அங்கத்தவர் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

பாராளுமன்றத்தில் அவசரகாலநிலை நீடிப்பது சம்பந்தமான விவாதத்தில் பேசிக்கொண்டிருந்த போதே பிரதமர் இந்தச் சஞ்சிகையை சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

'ஸ்பார்க்' சஞ்சிகையில் உள்ளவற்றை ''ஹன்சார்ட்''டில் பதிய வேண்டுமென்றும், இதன் பிரதி ஒன்றைப் பாராளுமன்ற நூலகத்தில் பார்வைக்கு வைக்க வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார். (ய-வா)

# விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C-1220

Pure Bread அல்சேஷன் நாய், குளிர்சாதனப்பெட்டி, Kenwood Chief எலக்றிக் கேற்றில் (Swan) Washing machine, Radio RX 47, விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ் பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலிச்சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில். (C 1324)

(Broilers) புரொயிலர் இறைச்சிக் கோழி, கோழி எரு, நல்லின தென்னங்கன்றுகள் முதலியன விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [C 1317]

## தேவை

மெசின் மைண்டர்கள் தேவை உடன் விண்ணப்பிக்கவும். திருமால் அச்சகம், 393, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [C 1342]

பெண் விற்பனையாளர்கள் தேவை. அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் 25-3-86க்கு முன் தொடர்பு கொள்ளவும். ரெலிகோணர், நவீனசந்தை, சாவகச்சேரி. (C 1288)

கிளிநொச்சி மாவட்டத்தில் எமது நிறுவனத்தின் பிரதிநிதியாக கமிசன் அடிப்படையில் பணிபுரிய 30 வயதுக்கு மேற்பட்ட ஒருவர் உடனே தேவை. கிளிநொச்சியிலிருந்து 3 மைல் சுற்றுடலில் வசிப்பவராகஇருத்தல் அவசியம். தொடர்பு கொள்ளவும்: பிராந்திய வர்த்தக சேவை, கணேசபுரம், கிளிநொச்சி. [C 1327]

## தவறிவிட்டது

இல: 681170650V. வேலாயுதம் முரளிதரன், கட்டுடை என்பவருடைய அடையாள அட்டையும், படப்பிரதியும் அரியாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். வேலாயுதம், முரளிதரன், 6-ம் கட்டையடி, கட்டுடை, மானிப்பாய். [C 1341]

பரந்தனில் 15-3-86 புகையிரத விபத்தில் வே. செந்திவேல் 507, காலி வீதி, வெள்ளவத்தை என்னும் விலாசமிடப்பட்ட எனது தேசிய அடையாள அட்டை யாழ்தேவி முதல் பெட்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சாமிக்காடு, வல்வெட்டித்துறை என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [C 1330]

M.K. கலீம் என்பவருடை தேசிய அடையாள அட்டையும், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அநுபவ நற்சாட்சிப் பத்திரம் 19-3-86 இல் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் M K. கலீம், 111, முஸ்லீம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் [ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகாமையில்] என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 1345]

## வகுப்புகள்

வயறிங், வெல்டிங், ரேடியோ, ரீவி, மோட்டார் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து - இரண்டு புதிய பிரிவுகள் 19-03-86, 21-03-86 ஆரம்பமாகின்றன. முதலிற் சேருபவருக்கு குறைந்த கட்டணம் அறவிடப்படும். சான்றிதழ் பெறுமதியானது. VISPA ENGINEERING, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 1279)

## தவறிவிட்டது

நஷனல் பனசோனிக் 2-in-1 Stereo Set RX 5200 F தவறிவிட்டது. கண்டெடுத்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: செலவராசா, 216, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C1319]

## 45-ம் நாள் நினைவஞ்சலி



**பொன். முத்துலிங்கம்**

அன்னையின் மடியில்: 07-07-1960

ஆள்பவன் பிடியில்: 06-02-1986

உற்றவர்க்கும் உறவினர்க்கும் உத்தம சகோதரனாய், உளமார்ந்த நண்பர்களுக்கு உற்ற தோழனாய், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையை முன்னெடுக்க விரும்பிய ஒருமுற்போக்கு சக்தியாய், ஏற்றுக் கொண்ட கொள்கையை முன்னெடுக்க முழுமையாய் அர்ப்பணித்த தியாகியாய் எல்லோரது நெஞ்சங்களிலும் வீற்றிருந்த நீ, ஆள்பவர்களின் கொலை வெறிக்குள் அகப்பட்டு இடைநடுவில்எமை விட்டுப்போய்விட்டாயே! நீ ஏற்றுக்கொண்ட கடமைகள் இன்னும் முடிவுறாது பாக்கி நிற்கின்றனவே!

06-02-86 அன்று நடைபெற்ற ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்தி அனுப்பியும், எமது துயரில் பங்கு கொண்ட உற்றவர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

22-03-86 சனிக்கிழமை நண்பகல் நடைபெற இருக்கும் 45-ம்நாள் நினைவஞ்சலியிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சகோதர சகோதரிகள்,
உற்றார், உறவினர்.

பொலிகண்டி. [C 1332]

## மின் தடை

### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-03-23ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முக்கிய திருத்த வேலை காரணமாக காலை 8 00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை பின்வரும் பகுதிகளுக்கு மின் விநியோகத்தடை ஏற்படுமென சகலமின்பாவனையாளர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

### மின்தடை ஏற்படும் பகுதிகள்

| | |
|---|---|
| உரும்பராய் | நாவாந்துறை |
| கோண்டாவில் | குருநகர் |
| இருபாலை வீதி | சீ-நோர் |
| கோப்பாய் | பாஷையூர் |
| தின்னவேலி | புங்கன்குளம் |
| கொக்குவில் | கனகரத்தினம் வீதி |
| நல்லூர் | தட்டாதெரு |

இம் மின் தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னுகம்.

[A 393]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## இவர்களுக்கு 2 இடங்கள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வட்டார ரீதியில் அண்மையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் 'நல்லூர்' இந்து தமிழ்ப்பெண்கள் பாடசாலை மாணவிகள் இரண்டு வெற்றிகளை ஈட்டியுள்ளனர்.

13, 17 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் இவர்களுக்கு இரண்டு இடங்கள் கிடைத்தன. (ஐ)

## மருதடி விநாயகர் மகோற்சவம்

[பண்டத்தரிப்பு]

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 29 ம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 14ம் திகதி புதுவருடப்பிறப்புத் தினத்தன்று இரதோற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

உற்சவத்திற்கான ஒழுங்குகளைக் கவனிக்கும்பொருட்டுச் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. பக்தர்களின நலன் கருதிவிசேடசுகாதார, போக்குவரத்து வசதிகளை மேற்கொள்வது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆலயவீதியில் சென்.ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப்படையின் முகாம் இம்முறையும் வழமைபோல் இயங்கிவரும் என்றும் பொலிசாருக்குப் பதிலாக வீதி ஒழுங்கு பாதுகாப்பு ஆகிய கடமைகளையும் இம் படையின் தொண்டர்கள் மேற்கொள்வார்கள் என்றும் படையின் வடபிராந்தியஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார்.


## Chundikuli Girls' College Jaffna.

DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

Week Days only: Duration 4 months.

Module I: Introduction to Computing and Data Processing.

Module II: Programming in Basic Language Including Terminal Practice in Arcon Electrone and I. B. M. P. C.

Course Fee: Rs. 1,500/-

Contact College Office before April 4th.

(A 392) PRINCIPAL.


## உருக்கமான மன்றாட்டு வேண்டுகோள்

08-03-86 சனிக்கிழமை இரவு யாழ். நகர் கோவில் வீதியிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட ஸ்ரான்லி வீதியிலுள்ள சோமசுந்தரம் மோட்டார் உதிரிப்பாகக் கடையில் வேலைசெய்யும் திரு. பாலரட்ணம் என்பவர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இதனால் இவரது மனைவி பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரி, மைத்துனர், மைத்துனிகள், மருமக்சள், ஒன்றுவிட்ட சகோதர, சகோதரிகள், அவர்களின் பிள்ளைகள், வயதுமுதிர்ந்த சிறிய தாய், மாமியார் ஆகியோர் ஆழ்ந்த மன வேதனையுடன் ஊண் உறக்கமின்றி துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறோம். இவர் ஒரு இருதய நோயாளியும், விசேட கவனிப்பும் உணவும் வேண்டியவர். ஆகவே நாங்கள் யாவரும் அவரைக் கூட்டிச் சென்றவர்கள் எவ்வித நிபந்தனையுமின்றி அவரை உடனடியாக விடுதலைசெய்யும்படி மன்றாட்டமாக மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

108, 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C 1343)


## விற்பனை

'SAKURA' கலர் பிலிம்

சுருள்கள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன.

Sakura Photo Suppliers,
233/1-1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C 1329)

நபீஸா ஜுவலர்ஸ் ஸ்தாபனத்தார்
தமது இரண்டாவது வருட பூர்த்தி விழாவை
இனிதே கொண்டாடுகிறார்கள்.

**நபீஸா ஜுவல்லர்ஸ்** 171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தூய்மையான 22 (CT) தங்க நகைகளை ஓடர் கொடுத்துப் பெற்றுக்கொள்ளவும்,
பழைய பவுண் நகைகளை கூடிய விலைக்கு விற்றுப் பணம் பெறவும்,
புதிய நகைகளை நவீன டிசைன்களில் உடன் பெறவும்,
எழில் நங்கையர் விரும்பும் நவீன வேலைப்பாடமைந்த
கால்சலங்கைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்:

**நபீஸா ஜுவல்லர்ஸ்.** (C 1312)

# மார்க்கோஸ் பனுமாவில் தஞ்சம்; பல நாடுகள் அவரை ஏற்க மறுப்பு

(வாஷிங்டன்)

**பிலிப்பைன்ஸை விட்டு வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி திரு மார்க்கோஸ் பனுமாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். அவருக்கு அந்நாடு புகலிடம் அளித்துள்ளது.**

இது சம்பந்தமான அமெரிக்க, பனுமா நாடுகளின் உயரதிகாரிகளிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. மார்க்கோஸ் தனது மனைவி இமெல்டா மற்றும் பல உறவினர்கள். நண்பர்களுடன் பிலிப்பைன்ஸைவிட்டு வெளியேறி குவாம் தீவுக்கும் பின்னர் ஹவாய் தீவுக்கும் சென்றது தெரிந்ததே! அங்கு அவர் பல பிரச்னைகளை எதிர்நோக்குகிறார். குறிப்பாக அமெரிக்க அதிகாரிகள், திரு. மார்க்கோஸ் தமது அமெரிக்க சொத்துக்களை சேர்த்த விதம் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். அத்துடன் தம்முடன்கொண்டு வந்த ஆவணங்களை பறிமுதல் செய்து புதிய பிலிப்பைன்ஸ் அரசிடம் ஒப்படைத்துள்ளனர். இது போன்ற பல காரணங்களால் இன்னும் பல நெருக்கடிகளை சந்திக்க வேண்டிவரும் என அச்சமடைந்துள்ள திரு. மார்க்கோஸ் மெக்ஸிக்கோ, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளிடம் தஞ்சம் கோரிக்யிருந்தாராயினும் இவையனைத்தும் அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டன.

இதனையடுத்தே இப்போது கரீபிய நாடான பனுமாவுக்கு செல்ல மார்க்கோஸ் உத்தேசித்துள்ளதாக தெரிகிறது.

(செ)

## இஸ்ரேலியப் பெண் எகிப்தில் சுட்டுக்கொலை!

(கெய்ரோ)

எகிப்தில் நடக்கும் வர்த்தகக் கண்காட்சி ஒன்றினைப் பார்வையிட்டு விட்டுத் திரும்பிய 2 பெண்கள் உட்பட 4 இஸ்ரேலியர் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தினால் ஒரு பெண் உயிரிழந்தார்! இருவர் காயமடைந்தனர்.

கெய்ரோவில் நடக்கும் இந்தக் கண்காட்சியைப் பார்த்து விட்டுத் தமது காரை நோக்கி இவர்கள் திரும்பிச் கொண்டிருக்கையில் திடீரென வந்து நின்றகாரொன்றினுள்இருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினால் தாக்கப்பட்டனர்.

சம்பவம் நடந்து சிறிதுநேரத்தின் பின்வெளிநாட்டு செய்திச்சேவையுடன் தொடர்பு கொண்ட ஒருநபர் 'எகிப்திய புரட்சிவாதி'களே இந்தக்காரியத்தை மேற்கொண்டனரென்றும், எகிப்தில் சில பகுதிகளில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலிய படைகள்வெளியேறும் வரை இத்தகைய தாக்குதல் தொடருமெனவும் எச்சரித்துள்ளார். (செ)

உலகச் செய்திகள்

## சுவிஸில் உள்ள வெளிநாட்டவர்: 'இழுபறி' நீடிக்கிறது!

(பேர்ன்)

சுவிற்சர்லாந்தில் அரசியல் புகலிடம் கோரியுள்ள வெளிநாட்டவர்களின் பிரச்னையைத் தீர்ப்பது தொடர்பான சுவிஸ் அரசாங்கத்தின் யோசனையை அந்நாட்டின் மக்கள் சபை நிராகரித்துள்ளது

அரசியல் தஞ்சம் கோரியுள்ள 3000 பேருக்கு இயல்பாக வதிவிட அனுமதியை வழங்க சுவிஸ் அரசு ஆலோசித்திருந்தது. இவர்களில் பெரும்பான்மையினோர் தமிழ் இளைஞர்களாவர் ஆனால் சுவிஸ் அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் நான்கு கட்சிகளில் மூன்று சட்சிகள் இந்தயோசனையை நிராகரித்துவிட்டன.

இதுபற்றி அந்தக்கட்சிகளின் அங்கத்தவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் அரசு கூறும் ஆலோசனையை அமுல் நடத்தினால் சுவிஸில் புகலிடம் அளிக்கும் கொள்கை அர்த்தமற்றதாகிவிடும் என்றும் கூறியுள்ளனர். தேவையேற்படும் பட்சத்தில் வெளிநாட்டவர்கள் அரசியல் புகலிடம் கோரி சுவிஸினுள் வருவதைத் தடுக்க அரசுக்கு மேலதிக அதிகாரங்கள் அளிக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

(செ)

## தென்னுபிரிக்கா: தொடரும் கொலைகள்!

(கேப்டவுண்)

'தென்னுபிரிக்காவில் நேற்று முன்தினம் இரு கறுப்பின மக்கள் கொல்லப்பட்டனர்.

இத்துடன் இந்த வாரத்தில் இதுவரை கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆறுக உயர்ந்துள்ளது.

தென்னுபிரிக்க நகரான சுவேப்டோவிலேயே இந்த இருவரும் கொலை செய்யப்பட்டனர். இந்த இருவரும் கல்லால் எறியப்பட்டுக்கொல்லப்பட்டனர்' எனத் தெரிவித்த பொலிசார் யார் இவர்களைக் கொலை செய்தது எனத் தெரிவிக்கவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்வலமாகச் சென்றுகொண்டிருந்த கறுப்பர்களின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் நால்வர் மரணமானுர்கள்.

[செ]

## சுக்கிரனின் இருபள்ளங்களுக்கு நினைவுப் பெயர்

(மாஸ்கோ)

அண்மையில் விண்வெளியில் வெடித்துச் சிதறிய 'சாலஞ்சர் என்னும் அமெரிக்க விண்வெளி ஓடத்தில் பயணம் செய்த ஜூடித் ரெஸ்னிக் கிறிஸ்டா மக் ஆலிஃப் என்னும் இரண்டு பெண்மணிகளின் (விண்வெளியாளர்)நினைவாக, சுக்கிரனிலுள்ள இரண்டு பள்ளங்களுக்கு அவர்கள் பெயர் சூட்டப்படும்.

## இலங்கைத் தமிழர் பிரச்னை: இந்தியாவில் தேசிய கமிட்டி

[சென்னை]

இலங்கைத் தமிழர் படும் அல்லல்களை இந்திய மக்களுக்கு உணர்த்தவும் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்க அனைவரினது ஒத்துழைப்பைப்பெறுவதற்காகவும் தேசியஅளவில் கமிட்டி ஒன்று அமைக்கப்படும் என்று திரு. நெடுமாறன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் மதுரையில் இதனைத் தெரிவித்தஅவர் சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளும் இதில் அங்கம் வகிப்பார்கள்எனக்கூறினுர்.

(செ)

## இன்று ஆங்கில தினம்

(வண்ணுர்பண்ணை)

யாழ் இந்து ஆரம்பபாடசாலை நடாத்தும் ஆங்கில தினப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை மேற்படி பாடசாலையில் அதிபர் திரு, மு. திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெறவுள்ளன.

நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு, எஸ். சிவநாயக மூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார் மாணவர்களது ஆங்கில எழுத்து, பேச்சு, நாடக நிகழ்ச்சிகளும் இதில் இடம் பெறுகின்றன.

# கூட்டணி விளக்கம்

(சென்னை)

'இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தாம் யாருக்கும் அதிகாரமளிக்கவில்லை என்றும் இதுபல்வேறு இனமக்களிடையே பிளவை ஏற்படுத்தும் சதிமுயற்சியாகும்' என்றும் தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் அறிக்கையொன்றின் மூலம் கூறியுள்ளார்

அவ்வறிக்கையில் இலங்கை அரசாங்கம் எடுக்கும் எந்த முடிவும் தம்மைக்கட்டுப்படுத்தாது எனவும் கூறியுள்ளார்.

(செ)

## சுவீடிஷ் பிரதமர் கொலை: கைதானவர் விடுதலை!

[ஸ்ரொக்ஹோம்]

சுட்டுச் கொலை செய்யப்பட்ட முன்னுள் சுவீடிஷ் பிரதமர் திரு ஓலோப் பாமெயின் கொலை சம்பந்தமாக சுவீடிஷ் பொலிஸாரினுல் கைது செய்யப்பட்ட நபர் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த வாரம் சுவீடிஷ் பொலிஸாரினுல் கைது செய்யப்பட்ட குலார்ப் என்ற இந்த சுவீடிஷ் பிரஜையின் மீதான குற்றச்சாட்டை சுவீடிஷ் பொலிஸார் நேற்றுத் தாக்கல் செய்தனர். ஆயினும் கடைசி நேரத்தில் இவ்வழக்கில் குற்றவாளியை அடையாளம் காட்டப்பட வேண்டிய சாட்சி ஒருவர் இவர்தான் கொலையாளி என சரியாக அடையாளம் காட்டத் தவறியதாலேயே இந்த நபர் விடுதலை செய்யப்பட்டார்.

(செ)

## கட்சி மாநாட்டுக்கு 2 லட்சம் கடிதங்கள்

[மாஸ்கோ]

''சோவியத் கம்யூனிட்ஸ் கட்சியின் 27 வது காங்கிரஸுக்கு 2 லட்சம் கடிதங்கள் வந்துள்ளன. இக் காங்கிரஸ் மீதான ஆழ்ந்த ஈடுபாட்டுக்கு இவை சானருகும்'' என்று சோவியத் நாட்டின் மத்திய டெலிவிஷன் நிலைய நிகழ்ச்சி கூறியது.

சோவியத் யூனியனின் அனைத்து பகுதிகளிடமிருந்தும் அன்ருடம் பல்லாயிரக்கணக்கான கடிதங்கள் வருகின்றன என்று 27 வது கட்சிக் காங்கிரஸ் செயலகத் தலைவர் அனதோலிலுகியானேல் பத்திரிகையாளரிடம் கூறினுர். இக் கடிதங்களில் பல பிரேரணைகள் சமர்ப்பிக்கப் பெற்றுள்ளன.

மாஸ்கோவின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நினைவுச்சின்னங்களைப் பாதுகாக்க அவசர நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என்று ஒரு கடிதம் கோருகிறது. தேசப்பொருளாதாரத் துறைகளின் பணியை மேம்படுத்தல், அதிகார வர்க்கப் போக்குகள் மற்றும் தனிப்பட்ட நிர்வாகிகள் தவறுகளைக் களைத்தல் இவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சில கடிதங்கள் கோருகின்றன.

## இளவரசர் அன்ட்ரூ - செல்வி பேர்கி திருமணச் செய்தி ஊர்ஜிதம்!

[பக்கிங்காம்]

பிரிட்டிஷ் மகாராணியின் 2 வது புதல்வரான இளவரசர் அன்ட்ரூ பிரிட்டிஷ் அழகியான செல்வி சாரா பேர்கியூசனை மணம்முடிப்பார்என்று மகாராணியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான பக்கிங்காம் மாளிகை அறிவித்துள்ளது.

26 வயதுடைய இளவரசர் அன்ட்ருவுக்கும், பேர்கி என செல்வமாக அழைக்கப்படும் 26 வயதான செல்வி பேர்கியூசனுக்கும் இடையில் உள்ள தொடர்புகளைப் பற்றியும் அவர்கள் விரைவில் மணம் முடிப்பார் எனவும் பிரிட்டிஷ் பத்திரிகைகள் அண்மைக் காலமாக ஹேஷ்யம் தெரிவித்துவந்தது தெரிந்ததே! இதனைத்தொடர்ந்தே இந்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஆயினும் திருமணம் எப்போது நடைபெறும் என அறிவிக்கப்படவில்லை.

ஒரு கடற்படை விமானியான இளவரசர் அன்ட்ரூ தென் அத்திலாந்திக் தீவான போக்லாந்து தீவு சம்பந்தமாக பிரிட்டனுக்கும், ஆர்ஜென்டைனுவுக்கும் இடையில் நடைபெற்ற போரில் பங்குபற்றினுர்

தற்போது தென் மேற்கு லண்டனில் ஒரு சிறு வாடகை வீட்டில் வசித்துவரும் செல்வி பேர்கிஅங்கு அலுவலகமொன்றில் கடமையாற்றுகிருர் இவரின் தந்தையான மேஜர் பேர்கியூன் இளவரசர் சார்ஸ்ஸின் போலோ மனேஜராவார்.

[செ]

## யாழ். இந்து வருடாந்த மதியவிருந்து

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக்கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த மதிய போசன விருந்து நாளை நடை பெறுகிறது

நாளைக் காலை பத்தரைமணிக்கு இதுசம்பந்தமான நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

யாழ் இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். மேற்படி வைபவத்துக்குஉதவி அரசாங்க அதிபர் திரு ச. பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

### மணி வாக்கு

அல்லற்பட்டாற்ருது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

—குறள்

# நமது நோக்கு

## கடற்ருெழிலாளர் அவலநிலை

இந்த நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் பெரும்பகுதியை மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் உழைத்துக் கொடுப்பதைப் போலவே கடல்படு திரவியங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன்மூலம் இன்னுமொரு பெரும்பகுதி வருமானத்தை உழைத்துக் கொடுக்கிருர்கள் கடற்ருெழிலாளர்கள்.

இதிலும், பெரும்பகுதி உற்பத்தி வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே நடைபெறுகின்றது. இருந்தும், அரசு இன்று அமுலுக்குக் கொண்டுவந்துள்ள புதியசட்ட திட்டங்களால் நாட்டின் மூலவளத்துறையொன்று படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பது போக, அத்துறையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர்புள்ள பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.

ஏற்கனவே அமுலாக்கப்பட்டுள்ள கண்காணிப்பு வலயப் பிரகடனத்திஞல் ஆழ்கடல் மீன்பிடியில் தொன்றுதொட்டு ஈடுபட்டு வந்த மீனவர் குடும்பங்களும் அவர்களின் உழைப்பை நம்பி ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு தொழிற்சாலைகளும் அவைகளில் பணிபுரிந்த ஆயிரக்கணக்கான மக்களும் பாதிப்படைந்துள்ளமை புதியவிடயமல்ல இப்பொழுது கடந்த 2ம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள புதிய விதிகளின்படி கடற்ருெழிலாளர்கள் கடற்கரையில் இறங்கிநடமாடவும்முடியாதுள்ளது.

இந்நிலைமையால் யாழ். மாவட்டத்தில் மாத்திரம், யாழ் அம்ச அதிபரின கருத்துப்படி 15 600 குடும்பங்களைச் சேர்ந்த 85,000 கடற்ருெழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமான கடற்ருெழிலாளர்கள் ஆட்சேப, ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தி ஜஞதிபதிக்கு அனுப்பி வைத்த மகஜர் ஒன்றின் பிரதியை யாழ்ப்பாணம் அரச அதிபர் திரு பஞ்சலிங்கத்திடம் நேற்று முன் தினம் கையளித்தனர். மகஜரைப் பெற்றுக்கொண்டு அவர்கள் மத்தியில் உரைநிகழ்த்திய அரச அதிபர்; கடற்ருெழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிர்க்கதியைத் தாம் பூரணமாக உணர்ந்துகொண்டிருப்பதை வெளியிட்டிருப்பதுடன், இம்மக்களின் நிவாரணத்துக்காக ஏற்கனவே அரசாங்கத்துடன் தாம் தொடர்புகொண்டு வலியுறுத்தி வந்துள்ளதாகவும் தொடர்ந்தும் இதில்கவனம் எடுப்பதாகவும் உறுதியளித்திருக்கிருர்.

கடற்ருெழிலாளர் ஒன்றியத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரில் அரசின் மேல்தட்டில் உள்ளவர்களால் தமக்கேற்பட்டுள்ள அவலநிலையைப் புரிந்துகொள்ள முடியாது என்றும் இப்போதைய நிலையில் உணவுமுத்திரைத் திட்டத்திஞல் ஒருவேளை உணவைக்கூட திருப்திகரமாகப் பெற்றுக்கொள்ள முடியாது என்றும், குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும்நிவாரணம்கூட கைக்கு வந்து எட்ட பலகாலம் பிடிக்கும் அதற்குள் பல குடும்பங்கள் உணவுப் பஞ்சத்திஞலேயே அழிந்து போய்விடக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது.

''எமதுமக்கள் ஏற்கனவே பசியின் கொடுமையை அனுபவிக்கத் தொடங்கிவிட்டார்கள். சரியான வாகனப் போக்குவரத்து இன்மையாலும், பொருள் கொண்டுவரும் வாகனங்கள் இடையில் கொள்ளையடிக்கப்படுவதாலும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உச்சமடைந்துள்ளன கடந்த காலங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாகுதல் கடலில்தொழில் செய்ய வாய்ப்பிருந்தமையால் மீனவர் குடும்பங்கள் குறைந்தபட்சமாகவாவது பொருள்களை வாங்கிக் கொள்ளமுடிந்தது. ஆஞல் இப்போதுசீவிப்பதற்கிருந்த ஒரே ஒரு மார்க்கமும் பறிக்கப்பட்டுவிட்டது. எமது மக்கள் அமைதி விரும்பும், கடவுளுக்குப் பயந்துவாழும் சமூகத்தினர். புதிய சட்டவிதிகள் இவர்களை விரக்தியும், அதிருத்தியும்கொள்ளச்செய்துள்ளன அமைதி விரும்பும் மக்களை இது ஒன்றே வன்செயலுககும் அராஜகத்துக்கும் தள்ளிக் கொண்டுபோய் விட முடியும்'' என மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழ்ப்பகுதிகளில் இவ்வாறு மிகப் பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இம்மக்களின் கோரிக்கைகளிலுள்ள நியாயத்தை இது சரியாக வலியுறுத்தியுள்ளது.

எனவே, மேலும் காலம் தாழ்த்தாமல் தமிழ்ப்பகுதிகளில் பாதிப்புக்குள்ளாகியுள்ள கடற்ருெழிலாளர்களின் அவல நிலையைப் போக்கும்விதத்தில் புதிய சட்டவிதிகளை அகற்றி அவர்களை வழமைபோல் தமது ஜீவாதாரத்தைப் பேணிக்கொள்ள அரசுஉதவ வேண்டும்.

அமைச்சர்களோ அன்றி வேறு உயர் அதிகாரிகளோ இம் மக்களின் நிலைமைகளை நேரில் வந்து பார்க்க முடியாத நிலையில் யாழ். அரச அதிபரின் ஆலோசனைகளை ஏற்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கின்ருேம்.

# 'ஆலயங்கள் அகதிகளுக்கு இன்று புகலிடமளிக்கின்றன'

## பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வரக்குருக்கள் கருத்து

[மாவிட்டபுரம்]

''ஆலயங்கள் வழிபாட்டுக்குரிய இடங்களாக மட்டுமல்லாமல், இன்று அகதிகளாகும் மக்களுக்கு புகலிடம் அளித்து பாதுகாக்கும் நிலையங்களாகவும் விளங்குகின்றன. ஆலயங்களின் அவசியத்தை இன்று நாம் உணரமுடிகிறது. ஆகவே ஆலயங்களை நாம் பேணிக் காக்கவேண்டும்.''

தெல்லிப்பழை வீமன்காமம் மயிலாபுரி இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய கும்பாபிஷேக விழாவையொட்டிய கிரியைகளை ஆரம்பித்துவைத்துப் பேசிய பிரதிஷ்டா குரு பிரம்மஸ்ரீ கு ஜெகதீஸ்வரக்கள் இவ்வாறு கூறினர்.

இந்த ஆலயம் பெரும் செலவில்புனரமைக்கப்பட்டு இன்று கும்பாபிஷேகம் நிகழ்கிறது. நமது துன்பங்கள் நீங்க கும்பாபிஷேக கிரியைகளையும், கும்பாபிஷேக விழாவையும் கண்டு தரிசித்து இறைவியின் அருளைப் பெறுவோமாக'' என்று அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.



## வெள்ளிச் சிந்தனை

### இறந்தார்துணை

உறவினர்களுடன் கூடி மகிழும் விதத்தில் விருந்து முதலிய செய்தல்- புண்ணியச் செயலே புரியும் இலட்சியத்துடன் வாழும் புனிதர்களாகிய முனிவர்கள் - துறவியர்- அந்தணர் போல்வார்க்கு உணவு - உடை முதலிய தேவைகளை ஆர்வத்துடன் நிறைவு செய்யும் வகையில் தானதர்மம் செய்தல் ஏழை எளியவர்கள் - அங்கவீனமுற்றவர்களுக்கு உண்டாகும் பசி முதலிய தேவைகள் நீங்க உதவுதல் என்பனவற்றின் ஒரு இல் வாழ்வான் - பொருள் தேடிப் பகிர்ந்து வாழும் பொறுப்புடைய குடும்பகாரன் அக்கறையுடன் செயற்படவேண்டும். இவற்றில் அக்கறை கொள்ளாது தனக்கும் மனைவி பிள்ளைகள் உறவினர்களுக்குமே தன் வருவாயை உபயோகின்ற - சேமிக்கின்ற பண்பு நாகரீகமான - அறிவுடையும் உடைய மனிதப் பண்பு ஆகாது

ஏழைகள் அங்கவீனர்களுக்கு உதவும் பண்பில் ஒரு பகுதியாக விளங்குவதே இறந்தவர்களைக்குறித்து செய்யப்படும் சைவசமயக் கிரியைகளின் பிரதான நோக்கமாகும்.

ஒரு உயிரின் செயற்பாட்டுக்கும் அறிவு விளக்கத்துக்கும் பிரதான காரணமான- சிறந்த பொருள் மனித உடம்பாகும்.

உடம்பை இழந்த உயிரின் தன்மைகள் - ஆசைகள்- தேவைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே அந்தியேட்டி - திவசம் முதலிய கிரியைகளின் பல செயல்கள் உள்ளன. மந்திர பூர்வமாகவும் குறிப்பிட்ட கிரியைகள் பூரண பயனைத்தரச்செய்யும் தகுதியும் இல்லாத சந்தர்பங்கள் ஏற்பட்டாலும் கூட சைவ சமய அடிப்படையில் இறந்த உயிர்களின் தேவைகள் ஆசைகள் நிறைவேறி ஈற்றில் நல்ல கதி அடையவேண்டும் என்ற ஆசையுடனும் பிரார்த்தனையுடனும் தானதருமம் செய்தல் - சிவசந்நிதியில் நெய் விளக்கேற்றுதல் - பசுவுக்குப் புல்லும் நீரும் வழங்கல் இறந்த உயிரின் 'நன்மையை நோக்கமாகக் கொண்டு பஞ்சாட்சர செபம் திருமுறை பாராயணம் புராண படனம் போன்ற சிவ புண்ணியங்களைச் செய்தல் என்பன சைவ சமயியாயுள்ள இல்வாழ்வான் ஒவ்வொருவனதும் தலையாய கடமையாகும்.

துறந்தார்க்கும்
துவ்வாதவர்க்கும்
இறந்தார்கரும்
இல் வாழ்வான்
என்பான் துணை.
-திருவள்ளுவர்

அருளாளன்.

# நயினதீவு மக்களுக்கு நிவாரண உதவி

(வண்ணூர்பண்ணை)

அண்மையில் நயினதீவில் ஏற்பட்ட அசம்பாவிதங்களிஞல் வீடுகளை இழந்து உடமைகளை இழந்து உயிர்களை இழந்து துயருறும் மக்களின் அவசியத் தேவைகளுக்கு உதவும் வகையில் அனலைதீவு மக்கள் சார்பில் 7500ரூபா நிவாரண நிதிஉதவியாக வழங்கப்பட்டுள்ளது.

அனலைதீவு மக்களிடம் சேகரிக்கப்பட்ட இந்த நிதி இம் மாதம் 15ம் திகதி நயினதீவு தெற்கு ஸ்ரீகணேசவித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது. அனலைதீவு பிரஜைகள் குழுத்தலைவர் திரு.வி சிவராசா இநநிதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிஞர்.

அனலைதீவு கிராமசேவையாளர், வைத்திய அதிகாரி, பாடசாலை ஆசிரியர்கள், அஞ்சலதிபர் உட்பட பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்,

இவ்வைபவத்திற்குவைத்திய அதிகாரியும், சட்டத்தரணியுமான திரு. திருநாவுக்கரசு தலைமை தாங்கிஞர்,

# "புதிய சிந்தனைகளை வெளியிட்டவர் பண்டிதமணி"

## வைத்தீஸ்வராவில் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''அன்னியரான ஆங்கிலேயராலும் அவர்களுடைய அடிவருடிகளாலும் சைவத்திற்கும் தமிழுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்தவர் நாவலர் பெருமான். அவர் வழிவந்த பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களிடமும் இத்தகைய எதிர்ப்புணர்ச்சி இருந்தது. சிறுமை சண்டு பொங்கியவர் அவர். கந்தபுராணக் கலாசாரத்தைக் கைக்கொண்டொழுகும் ஈழத்துத் தமிழ் அறிஞர்களைக் குறைத்தோ தாழ்த்தியோ பேசுவதற்கு அவர் யாரையும் விடமாட்டார். அப்படிப் பேசுவோரைத் தனது தர்க்க ரீதியான வாதங்களாலும் உறுதியான சான்றுகளாலும் மண்கௌவச் செய்திடுபவர் பண்டிதமணி'' என யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற பண்டிதமணி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய அதிபர் திரு சி. சிவசரவணபவன் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் பேசுகையில்; ''புதிய சிந்தனைகளைத் தனக்கேயுரிய தனித்துவமானமுறையில் வெளியிட்ட பண்டிதமணி அவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றிலே முக்கியமானஒரிடத்தை அடைந்துவிட்டார். எமது மண்ணிலே பிறந்து எம்மிடையே வாழ்ந்த பண்டிதமணி அவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டுகளை மாணவர்கள் விபரமாகவும் தெளிவாகவும் அறிந்துவைத்திருத்தல் அவசியம். தன்னுடைய தமிழ்த் தொண்டின் காரணமாகப் பண்டிதமணி அவர்கள் தமிழ் உள்ளங்களில் என்றென்றும் நிலைத்திருப்பார் என்பதற்கையமில்லை'' என்ருர்.

கூட்டத்தின் முடிவில் இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

### திருத்தம்

20ம் திகதி 'ஈழநாடு' 'நமது நோக்கு' கடைசிப்பந்தியில் ''சகல அதிகாரங்களையும் உடைய சோஷலிச ஜஞதிபதி தீவிர, மிதவாத இடதுசாரி முன்னணியுடன் எவ்வாறு நின்றுபிடிப்பாரென்பது கேள்விக்குறியாகும்'' என்றிருப்பதை ''சகல அதிகாரங்களை உடையசோஷலிச ஜஞதிபதி தீவிர, மிதவாத வலதுசாரி முன்னணியுடன் எவ்வாறு நின்று பிடிப்பாரென்பது கேள்விக்குறியாகும்'' எனத் திருத்தி வாசிக்கவும்.

(ஆ-ர்)

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மடம்வீதி திருவள்ளுவர் சனசமூகநிலையத்தினர், அப்பகுதி மக்களின் குறைகளை விளகுவதற்காக அரசாங்க கூட்டுத்தாபன பொது ஸ்தாபனங்களின் உத்தியோகத்தர்களை அழைத்து கூட்டமொன்றினை இன்று நடத்தவுள்ளனர்.

இன்று பி. ப. 2 மணிக்கு நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு மேற்படி நிலையத் தலைவர் திரு. கே. துரைசிங்கம் தலைமை தாங்குவார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஞே.க.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி காலை சவேரியர் தேவாலய முன்றலில் திருமதி எஸ். பரமானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது. வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு. சிவவிநாயகமூர்த்தி பிரதம விருந்தினராகவும், சு. மகேந்திரா தம்பதிகள், சோ. சிங்காரவடிவு தம்பதிகள் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வார். வண. பிதா குலாஸ் அடிகள் மங்கல விளக்கேற்றிவைப்பார்.

# அந்த 45 இளைஞர்களின் நிலை என்ன?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் காணாமல் போன 45 இளைஞர்களின் நிலை குறித்து மட்டக்களப்பு பிரஜைகள் குழுவினர் ஒருமாதத்துக்கு முன் இணைப்பதிகாரியிடம் கையளித்தமகஜர்குறித்து பரிசீலனை செய்யப்படாமையால் மேல்மட்ட நடவடிக்கையில் இறங்கப்போவதாகக் பிரஜைகள் குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தமகஜரில், ''காணாமற் போன 45 இளைஞர்களின் பெயர் விபரங்கள் தரப்பட வேண்டும். கைதானோர் எந்த முகாமுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்ற விபரம் தெரியப்படுத்தல் வேண்டும் பாதுகாப்புப் படையினர்தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பொது மக்களை இம்சிக்கக் கூடாது'' போன்ற கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருந்தன.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் பிரசன்னா புஸ்பராசன்

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த புஸ்பராசன் மஞ்சுளா தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரசன்னா இன்று (21-3-1986) தனது முதலாவது பிறந்த நாளை மேற்கு ஜேர்மனியில் உள்ள ''ஹம்பர்க்''கில் குதூகலமாகக்கொண்டாடுகிறார். இவரை ஜேர்மனி அப்பா, அம்மா, கப்பல் மாமா, ஜேர்மனி மாமா, யாழ்ப்பாணம் அப்பப்பா, அப்பம்மா, திருகோணமலை அம்மப்பா, அம்மம்மா, திருகோணமலைமாமா, மாமி, மைத்துனர்மார், புங்குடுதீவு அம்மம்மா, பாட்டிமார், சித்தப்பா, சித்திமார், அத்தைமார் எல்லோரும் அம்பாளின் அருளால் சகல செல்வமும் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றனர்.

C-1325

## ஆணையாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்திலிருந்து 84ம், 85ம் ஆண்டுகளில் இரவலாகப் பெற்றுச் சென்ற நூல்களை சிலர் திருப்பி ஒப்படைக்கவில்லை என்றும், அவ்வாறு எடுத்துச்செல்லப்பட்ட நூல்களை வைத்திருப்பவர்கள் நல்லூர் இந்து விடுதி நூலகர் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறும், யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## யாழ். வர்த்தகர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தகசங்கின் வருடாந்தப்பொதுக் கூட்டம் ஏப்ரல் மாதம் 6ம் தேதி நடைபெறவிருக்கிறது,

யாழ். வர்த்தக சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் இம் மாதம் 23-ம் தேதி நடைபெறவிருக்கிறது. (க

## சிலாபத்துறை தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

மன்னார்மாவட்டத்தில் சிலாபத்துறை முகாமுக்கு அண்மையில் வாகனங்களில் வந்து இராணுவத்தினர்மீது தமது இயக்கப்போராளிகள் மேற்கொண்ட தாக்குதலில் 6 இராணுவத்தினரும் மூன்று உத்தியோகத்தர்களும் பலியானதாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ''சிலாபத்துறை முகாமிற்கு அண்மையில் கொண்டச்சி என்ற இடத்தில்உள்ள மந்திரிகைப் பண்ணையிலிருந்து 3 இராணுவ வாகனங்கள் வெளியேறும்போது முன்னால் வந்த ஜீப்மீது மேற்கொண்ட தாக்குதலில் 6 இராணுவத்தினரும், பண்ணையில வேலை செய்யும் 3 உத்தியோகத்தர்களும் ஸ்தலத்திலேயே பலியாயினர் சிங்களக் குடியேற்றத்தைக் கொண்ட இப்பண்ணைகுள் ஓர் இராணுவமுகாமும் அமைந்திருக்கிறது.'' (மா)


சரவணபவன்
மினி சினிமா
10-30, 1-30, 4-45, 7-00
INVINCIBLE BARBARIAN
(Fight, Murder, Thrill, Sex)

எம்பயர் திரையில்
10-30 2-30, 6-30,
ரஜனி—ஸ்ரீதேவி
அடுத்த வாரிசு

LIDO Jaffna
10-30, 2-30, 6-30
இன்று முதல்
சிவாஜி-சரிதா-ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
புதிய பிரதி [கலர்]

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா கவுண்டமணி நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)


# அடகுவைத்தோர் சங்கத் தூதுக் குழு நாளை இணைப்பதிகாரியை சந்திக்கும்

(யாழ்ப்பாணம்)

அடகு வைத்த நகைகளை மீளளிக்குமாறு கோரி மக்கள் வங்கியின் வடபகுதிக்கிளை அலுவலகங்களின் முன்னிலையில் மறியல் போராட்டம் நடத்தி வரும் அடகுவைத்தோர் சங்கத்தின் தூதுகோஷ்டி தங்கள் கோரிக்கை சம்பந்தமாக பாதுகாப்பு இணைப்பதிகாரியை நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்குச் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளது.

பலாலி இராணுவ முகாமில் இடம்பெறவிருக்கும் இச்சந்திப்பில் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களில் 3 பெண்களும் 4 ஆண்களும் இடம்பெறவுள்ளனர்.

இச்சந்திப்பைத் தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபர், மக்கள்வங்கியின்வடபிராந்திய முகாமையாளர் ஆகியோரின் அனுசரணையுடன் இம் மாதம் 31ம் திகதி கொழும்பிலுள்ள மக்கள் வங்கித்தலைமை அதிகாரிகளுடன் நகைகள் மீளளிப்பது சம்பந்தமாக இச்சங்கத்தின் தூதுகோஷ்டியினர் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் அடகு நகைகள் பலாலிக்கும் பின்னர் யாழ். கோட்டைக்கும் எடுத்து வரப்பட்டு அடகு வைத்தோருக்கு வழங்குவது சம்பந்தமாகவே இப்பேச்சுவார்த்தை நடைபெறுவதாகப் சங்கப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

அதேசமயம் நேற்று நான்காவது நாளாக அடகு வைத்தோர் சங்கத்தின் மறியல் போராட்டம் நடைபெற்றது

அடகு வைத்தோர் சங்கத்தினர் யாழ் செயலகம், இலங்கை வங்கி வடபகுதிக் கிளைகள் ஆகியவற்றுக்கும் தமதுமறியல் போராட்டத்தை விஸ்தரிக்க வேண்டியிருப்பதால் பாதிக்கப்பட்டவர்கள் பங்களிப்பையும், பாதிக்கப்படாதவர்கள் ஆதரவையும் வழங்குமாறு கேட்டுள்ளனர்

அத்துடன் வங்கியின் ஏனைய வாடிக்கையாளர்கள் நலன் கருதி போராட்டம் இடைநிறுத்தப்படாமையினால் தங்கள் பிரச்னைகளை அரசாங்க அதிபரிடம் முறையிடுமாறும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெற இருப்பதாலும்வடபகுதியில் வைத்து அடகு நகைகள் வழங்குவதற்கான சிலமுக்கிய விபரங்களைத் திரட்டவேண்டியிருப்பதாலும் அனைத்துப் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களும் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் குறிப்பிடப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகளின் முன்பாக காலை 7-30 மணிக்கு ஒருங்கு சேரும்படி சங்கம் தெரிவித்துள்ளது.

21ம் திகதி வெள்ளி: யாழ். பிரதான வீதிக்கிளை, சுன்னாகம் கிளை. 24 திங்கள்: யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை, காங்கேசன்துறைக்கிளை, 26 புதன்; யாழ் கஸ்தூரியார் வீதிக்கிளை, சாவகச்சேரிக்கிளை 27 வியாழன்: யாழ். நவீன சந்தைக்கிளை, ஊர்காவற்றுறைக் கிளை. ஏப்ரல் 2 புதன்: நெல்லியடிக்கிளை 3 வியாழன்: பருத்தித்துறைக் கிளை. 4 வெள்ளி: வல்வெட்டித்துறைக்கிளை. (மா)

# யாழ். நகர வீதிகளில் ஒழுங்கு கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரின் பிரதான வீதிகளில் ஒருவழிப்பாதை போக்குவரத்து ஒழுங்கு மீண்டும்நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த ஒருவழிப்பாதை ஒழுங்கு காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி போன்ற வீதிகளில் வழிகாட்டியாக இளைஞர் நின்று பிரயாணிகளுக்கு வீதி ஒழுங்கை மேற்கொண்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்தில் சீர்கெட்டிருக்கும் வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்று தமிழீழ மக்கள் சார்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் விடுதலை இயக்கங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்த தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. (வா)

# மீனவர்குடும்பங்களுக்கான நிவாரணம் அரசாங்க அதிபர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சுமார் 15 650 குடும்பங்களைச் சார்ந்த பதினையிரம் மீனவர்களுக்கு 1985 ஜனவரியிலிருந்து விசேட உணவு முத்திரைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், 1986 ஜூன் மாதம் வரை விசேட உணவு முத்திரைகள்வழங்கப்படவுள்ளதாகவும் யாழ் அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

தனியார் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் மூலமும் வழங்கப்பட்ட உதவிகளை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணமாக கொடுக்கப்பட்டதாகவும் கூறுகின்ற அரசாங்க அதிபர், மிகப்பெரும்பாலான மீனவர்கள ஓரளவு நிவாரணத்தை உணவு முத்திரைகள், தொண்டர் ஸ்தாபனங்களின் நன்கொடைகள் மூலம் தொடர்ந்து பெற்று வருவதாகவும் கூறினார்.

மேலும், பல நிவாரண நடவடிக்கைகளில் ஒன்றாக பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்குத் தலா ரூ. 200—250 க்கும் குறையாத மேலதிக கொடுப்பனவுகளைப் பொருட்களாகக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவித்த அரசாங்கஅதிபர் இக்கொடுப்பனவுகள் மார்ச் மாத இறுதிக்குள் அமுலுக்கு வரும் எனறும் அறிவித்தார்.

கடந்த 19ந் திகதி அன்று ஈழநாட்'டில் ''மீனவர்குடும்பங்களுக்கு நிவாரணம்இல்லை'' என்று வெளிவந்த செய்தி தொடர்பாகவே யாழ். அரசாங்க அதிபர் மேற்படி விளக்கத்தைத் தெரிவித்துள்ளார்.


சேவ்ரி டிரான்ஸ்போட் ஸ்தாபனத்தாரின்

ஓர் முக்கிய அறிவித்தல்

11-03-1986இல் எங்கள் லொறி பொருட்களுடன் கடத்தப்பட்டது தொடர்பாக பொருட்களுக்குரியவர்கள் யாவரும் 21-03-86 வெள்ளி பி. ப. 2 மணிக்கும் 3 மணிக்குமிடையில் எமது காரியாலயத்துடன் கண்டிப்பாக தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

சேவ்ரி டிரான்ஸ்போட் நிறுவனம்

A-397


## நெடுங்கேணி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளன.

கமலகுமாரி ரவீந்திரன் (25 வயது), பொ. குகதாஸனும் (30 வயது), 28 வயதுள்ள அவரது சகோதரர் ஒருவரும், பெருமாள் சிறீ ரங்கன் (60 வயது), அ நேரு 45 வயது) இவர் 4 பிள்ளைகளின் தந்தை), கா. விசுவலிங்கம் (55 வயது) 8 பிள்ளைகளின் தந்தை), ப செல்லத்துரை (38 வயது), அ ஆறுமுகம் (36 வயது, க. காளிக்குட்டி (32 வயது).

பறங்கியர், முஸ்லிம்கள் உட்பட 14பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள்நெடுங்கேணி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து வவனியா அரசாங்க அதிபர் திரு கே. சி. லோகேஸ்வரனும், பிரஜைகள் குழுத்தலைவர் சட்டதரணி எஸ் சொர்ணபாலாவும் வவனியா இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு நிலைமையைவிளக்கியுள்ளனர். [மா]

## நினைவஞ்சலி

அமரா நாகலிங்கம் சிதேவிப்பிள்ளை



மலர்வு: 1905
உதிர்வு: 20-02-1986
திதி: 22-03-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்துஎம்மைஉயர்வு பெறவைத்த அன்புத் தெய்வமே; உங்கள் ஆத்மா சாந்தியுற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்

அன்னாரின் இறுதிக் கிரியையின்போதுசமூகமளித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும், பல்வேறு உதவிகள் புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

22-03-1986ம் திகதி சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக்கிரியையில் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரம்பொன் கிழக்கு; ஊர்காவற்றுறை

[A 396]

# கடல்தொழிலாளர் விஷயத்தில் நல்லதீர்வுகாண ஜி.ஏ.முயற்சி

### அரசை வற்புறுத்திவருவதாக அவரே கூறுகிறுர்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணப் பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடையால்இலங்கை மீன்பிடித் துறைக்கே பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது ''

இவ்வாறு நேற்று யாழ் கச்சேரிக்கு ஊர்வலமாகச்சென்ற கடல் தொழிலாளர் மத்தியில் பேசும்போது யாழ் அரசாங்க அதிபர் திரு.எம். பஞ்சலிங்கம் குறிப்பிட்டார். ஊர்வலமாகச் சென்றவர்கள் சார்பாக டாக்டர் பிலிப் சமர்ப்பித்த மகஜரைப் பெற்றுக்கொண்ட பின்பு அரசாங்க அதிபர் பேசினார். அவர் அங்கு மேலும்பேசுகையில் ''15600 குடும்பங்களைக் கொண்ட 85 ஆயிரம் கடல் தொழிலாளர்கள் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட தடையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அரசாங்கம்வழங்குகின்ற நிவாரணம்நாளாந்த சீவியத்துக்கே போதுமானதல்ல. கடல் தொழிலாளர்கள் சம்பந்தமான நல்ல முடிவினை எடுக்க நான் அரசாங்கத்தைப் பலமுறைவற்புறுத்தியுள்ளேன் மேலும் இது பற்றிய நடவடிக்கையில் ஈடு படுவேன்'' என்றூர்.

யாழ். பேராலய பங்குத் தந்தை ஜெபநேசன் அடிகள் தலைமையுரையாற்றுகையில் : கடல் தொழிலாளர்களைப் பட்டினி போட்டு மறை முகமாக கொல்வதற்கு அரசாங்கம் சூழ்ச்சி செய்வதாகக்கருத இடமுண்டு. கடல் தொழிலாளர்கள் உழைக்கக் கூடச் சுதந்திரம் இல்லாதவர்களாக இன்று ஆக்கப் பட்டுள்ளனர். கடலில் சுடப்பட்டுக் கடல் தொழிலாளர்கள் இறக்கின்றனர். அவர்களின் வள்ளங்கள், வலைகள் அழிக்கப் படுகின்றன. தொழில் செய்ய முடியாததால் வள்ளங்கள் பழுதடைகின்றன. உணவு முத்திரை. நிவாரணம் எல்லாம் வெறுங் கண் துடைப் பாகும். ஒரு நாளைக்கு உணவு உண்ண முடியாத நிலையில் கடல் தொழிலாளர்கள் இருக்கிறுர்கள். இந்த நிலையில் நிவாரணம் வழங்கப்படுவதாகவும், உணவு முத்திரைகள் கொடுக்கப்படுவதாகவும் பத்திரிகைகள் வானெலிகள் கூறுகின்றன. ஆனல் அப்படி நடப்பதாகத் தெரியவில்லை'' என்றூர்.

வடபகுதி கடல்தொழிலாளர் ஒன்றியச் செயலாளர் திரு. எஸ். தவரத்தினம் தமது உரையில் கடல் தொழிலாளர்களாகிய ''நாம் எவ்வளவோ பொறுமையாக இருந்து வருகிறேம். நடாத்தப்பெற்ற போராட்டம் ஆரம்பக் கட்டமே. கடல் சட்டத்தை வள்ளங்களை ஓடவிடுவதன் மூலம் உடைத்தெறியும் பலம் எம்மிடையே உண்டு. ஆனல் எதற்கும் பொறுமை வேண்டும் என்பதால் மௌனமாக உள்ளோம். எமது பிரச்னைகளை உடன் தீர்க்க வேண்டும். கடல் வலயச் சட்டத்தை உடன் வாபஸ் பெற வேண்டும்'' என்றூர்.

யாழ். செயலக வளவினுள் நடைபெற்ற இக் கூட்டத்தில் இராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகி இறந்த கடல் தொழிலாளர்கள் விவசாயிகளுக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. (ஐ)

---

# ''கடல் செல்லத் தடுக்கும் சட்டங்களை உடனடியாக நீக்கவும்!''

### கடற்றெழிலாளர் ஒன்றியம் ஜனதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

''எமது மீனவ சமூகத்தினர் கடல்பரப்பினைத் தொழில் நிமித்தம் பயன்படுத்துவதை முற்ருகத் தடைசெய்யும் சட்டங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டும். இவ்வாருன நடவடிக்கை மூலம்ம நிலைமை மேலும் மோசமடைவதையும் அதன் வாயிலாக உயிர், பொருள்சேத மேற்படுவதையும் தவிர்க்கமுடியும்.''

அவசரகால பிரமாணங்களின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கடல்வலயச்சட்டத்தை நீக்கக் கோரி வடபகுதி கடற்றெழிலாளர் ஒன்றியம் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது. மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களின் கடலோரப் பகுதிகளில் முன்னர் விதிக்கப்பட்ட கண்காணிப்பு வலயம் இவ்வலயத்தினுள் வாழும் எமதுசமூகத்தினருக்குப்பலத்த அடியாக அமைந்ததுடன் தலைமுறை தலைமுறையாக நாம் அனுபவித்துவந்த ஆழ்கடல் மீன்பிடி உரிமையையும் பறித்தெடுத்தது. முதலாளிகள்கீழும் சம்மாட்டிகளின் கீழும் வேலை செய்த பல கடற்றெழிலாளர்கள் தங்களது ஒரே ஜீவனேபாயமான தொழில்களை இழந்தனர்

''அன்ருடங்காய்ச்சி மக்களின் பிரச்னைகளைச் சமுதாயத்தின் உயர்தட்டுகளிலுள்ளவர்கள் பூரணமாக உணர்ந்து கொள்ளுவது அசாத்தியம். புதிய சட்டத்தால் தமது தொழில்களை இழந்து குடும்பங்களுடன் அவஸ்தையுறுவோரின் துயரத்தைசுகசௌகரியங்களை அனுபவிக்கும் பெரியமனிதர்களால் புரிந்துகொள்ளமுடியாது.

''நடைமுறைக்கு இன்னும் வராதுள்ள நிவாரண உணவு பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் வழங்கப்படவுள்ள ரூ 200 அல்லது ரூ. 250 இன்னும் பஞ்சநிலையில்அவஸ்தைப் படும் எமது சமூகத்தவரின் துயர் துடைக்க ஒரு மூலைக்கும் போதாது'' என்று மேற்படி மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது, (ஷ)

---

# ''தமிழ் மக்களுக் கெதிராக பொதுமக்களின் பணத்தில் அரசு யுத்தம் நடத்துகிறது''

### கூட்டுறவு ஊழியர் மத்தியில் விஜயானந்தன்

(யாழ்ப்பாணம்)

''தமிழ்ப்பேசும்மக்களுக்குஎதிராக அரசு தொடுத்திருக்கும் யுத்தத்திற்கு நாள் ஒன்றிற்கு ஒன்றரைக்கோடி ரூபாவை செலவளித்துக் கொண்டிருக்கிறது, இது பொதுமக்களின் பணம் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் சொந்தப் பணம் அலல ஆகவே இந்த சாதாரணமக்களைக் கொன்று குவிக்கும் யுத்தம் உடன்நிறுத்தப்படவேண்டும்.''

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின யாழ்ப்பாணப் பட்டணக்கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றியவடபிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழுவின் அமைப்பாளர் திரு. எஸ் விஜயானந்தன் இவ்வாறு கூறினார்.

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் திரு. நா. சின்னத்துரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்

''தமிழ்ப்பேசும்மக்களின்நியாயபூர்வமான கோரிக்கைகளை வென்றெடுக்க ஒன்றிணைந்த வெகுஜனப் போராட்டமே அவசியம் இப்படிப்பட்ட போராட்டத்திற்கு தொழிலாளர் வர்க்கத்தின் உற்சாகமான பங்களிப்பு மிகவும் முக்கியம் அல்லா விட்டால் போராட்டங்கள் சுயநலநோக்குடன் திசை திருப்பப் பட்டு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் கடந்தகால அனுபவங்கள் சில இதனை நிரூபித்துள்ளன.'' என்றுர்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் செயலாளர் திரு, த. இராசதுரை பேசுகையில் ''மற்றையதுறைகளில்கடமை புரியும் ஊழியர்கள் பெறுகின்ற வேதன உயர்வையோ மற்றும் சலுகைகளையோ கூட்டுறவு ஊழியர்கள் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை இருந்து வருவது கவலைக்குரியது எதிர்காலத்தில் எமது ஐக்கியத்தின் மூலம் சகல உரிமைகளையும் பெறுவதற்கு போராடுவோம்'' என்றூர்.


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ சுவிஸ்

★ இத்தாலி ★ பிரான்ஸ்

★ மேற்கு ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு
உங்களை எமது பிரதிநிதி வெகுவிரைவில்
அழைத்துச்செல்வார்.

உடன் தொடர்பு கொள்ளவும்:

**லிப்ருஸ் லிமிற்றெட்,**

R. G கட்டடம், No. 70, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்,

No. 60, SEA BEACH ROAD, PETTAH, Tele. No. 29148

மற்றும்

விசா, ரிக்கற், பாஸ்போட், பொன்ட்

ஆகியவற்றிற்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்,

(A 402)


---

# தெல்லிப்பழை ப. நோ கூ. சங்கம் களஞ்சியத்தில் தீ விபத்து 1000 மூடை மா நாசம்!

[மாவிட்டபுரம் நிருபர் ஞா. இராமநாதன்]

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சியத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு திடீரென ஏற்பட்ட எதிர்பாராத தீவிபத்தில் சுமார் ஆயிரம்மூடை மா எரிந்து நாசமாகியது. களஞ்சிய கட்டிடமும் பலத்த சேதமடைந்தது.

ப. நோ. கூ. சங்க களஞ்சியத்தில் செவ்வாய் இரவு 11 மணியளவில் திடீரென தீப்பிடித்துக்கொள்ளவே பொது மக்களும் கடமையில் இருந்த ஊழியர்களும் உடனடியாக தீயை அணைப்பதில் ஈடுபட்டனர்.

இருந்தபோதும் களஞ்சியத்திலிருந்த சுமார் 1000மூடை மா எரிந்து நாசமாகியது. களஞ்சிய கட்டிடமும பலத்த சேதமடைந்தது.

உடன்தீயை அணைக்களடுத்த முயற்சியால் ஏனைய கட்டிடங்களுக்கும் தீபரவாது தடுக்கப்பட்டது.

இத்தீவிபத்திற்கான காரணம்எதுவும் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. மின்ஒழுக்கால் தீபிடித்திருக்கலாம்என்று கூறுவதற்கில்லையெனவும் சமீபத்தில்தான் இந்த களஞ்சிய மின்விநியோகக்கம்பிகள்பழுது பார்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்தத் தீவிபத்தால் 5லட்சம் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தெரிவித்தார், தீவிபத்தின் காரணம் பற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் கூறினர்.

இத்தீவிபத்து தெல்லிப்பழை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பெருமளவில் மக்கள்கூடி எரிந்த களஞ்சியத்தை பார்வையிட்டனர். சங்கத்தின் மொத்த வியாபார பகுதியும் இயங்க முடியாத நிலையில் இருந்தது.

---

# புறநிலையான சுய விமர்சனத்தை வலியுறுத்தியவர் கைலாசபதி

(யாழ்ப்பாணம்)

''புறநிலையான சுயவிமர்சனம் செய்யவேண்டும் என்பதனை அவ்வப்போது வலியுறுத்திவந்தவர் பேராசிரியர் கைலாசபதி. கற்பனை இலக்கியம் படைக்காமல் யதார்த்த இலக்கியம் படைக்க வேண்டும் என்று எழுதிய கைலாசபதி மறைந்தமை எமது துர் அதிர்ஷ்டமே.''

மேற்கண்டவாறுநேற்றுமுன் மாலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 'தாயகம்' சஞ்சிகை விமர்சனக் கருத்துரையின் போது பேராசிரியர் அ சண்முகதாஸ் குறிப்பிட்டார்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் யாழ். பல்கலைக் சழகத் தமிழ் மன்றமும், கலை இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய விமர்சனக் கூட்டத்தில் பேராசிரியர் சண்முகதாஸ் தொடர்ந்து பேசுகையில்;

''கலை இலக்கியப் படைப்பில் மக்கள் விரோத, ஜனநாயக விரோத, தேசவிரோத சக்திகளைத் 'தாயகம்' எதிர்க்கும்'' என்ற அச்சஞ்சிகையின் கொள்கைப் பிரகடனத்தைக் காலத்திற்கேற்ப மாற்றிச் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டு, 'மொழியியலாளன் ஒருவன் எந்த மொழியும் இறந்துவிட்டது என்று கூற மாட்டான் என்றூர்.

தலைமையுரை நிகழ்த்திய கவிஞர் இ. முருகையன் தமதுரையில்; 'நிகழ்காலத்து நிகழ்ச்சிகளைச் சித்தரித்துச் சமூக விஞ்ஞான நோக்கிலே சிறுகதை எழுதும் சிலர் இன்று 'தாயகத்தில்' இடம் பிடித்துக் கொண்டுள்ளனர். தாயகம் தனித்தன்மை வாய்ந்த இலக்கிய ஏடு. 1974—1975 காலகட்டத்தில் 7 இதழ்கள் வெளிவந்தன. 1983ல் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது. பாரதி நூற்றுண்டு தொடர்பாக தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் கருத்தரங்குக் கட்டுரைகளைத் தொகுத்து 'பாரதி பன்முகப் பார்வை' என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. 'அம்பலத்தடிகள்' என்ற பெயரில் இசைநாடக முயற்சிகளையும் இப்பேரவை மேற்கொண்டுள்ளது'' என்றூர்.

வித்துவான் க, சொக்கலிங்கமும் மதிப்பீட்டுரை நிகழ்த்தினர். தமிழ்மன்றத் தலைவர் சு. மணிவண்ணன் வரவேற்புரை நிகழ்த்தினர். (நா)

## கட்டுவனில்
# ரூபா. 1 1/4 லட்சம் பெறுமதியான வாகனம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில் வீடொன்றுக்குள் புகுந்த திருடர் கோஷ்டி வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த சமயம் பார்த்து சுமார் ஒன்றேகால் லட்சம் ரூபா பெறுமதியான வாகனம் ஒன்றை திருடிச் சென்றுள்ளனர்.

தெலலிப்பழை - கட்டுவன் ஐயனர் கோவில் வீதியைச் சேர்ந்த ஒய்வு பெற்ற தோட்டப் பாடசாலை ஆசிரியர் இராசா குட்டித்தம்பி என்பவருக்குச் சொந்தமான 38 ஸ்ரீ 2468 இலக்க வெள்ளை நிற 'டெலிகா' ரக வான் திருடப்பட்டதாகும்.

இந்த வான் கட்டுவன் சந்திக்கண்மையில் உள்ள, க இரத்தினசிங்கம் என்பவரின் வீட்டுக்கராஜில் பாதுகாப்புக்கருதி விடப்பட்டிருந்தது என்றும் சம்பவ தினத்துக்கு மறுநாள் காலை வீட்டிலிருந்தவர்கள் நித்திரை விட்டெழுந்து பார்த்தபொழுது பூட்டப்பட்டிருந்த கராஜ் கதவு திறக்கப்பட்டிருந்ததென்றும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## "நற்றமிழ் இளையன்"

ஆத்மீக உணர்வு,இறை நம்பிக்கை, மனிதப் பண்பு,அடக்கம், அன்பு, இரக்கம் ஆகிய நற் குணங்கள் ஒருங்கே அமைந்தவர்களை காண்பது மிக அரிதான இக் காலத்தில் நயினை புஷ்பாகரனின் இழப்பு பேரிழப்பாகி விட்டது

சிறு வயதில் தாயை இழந்த 4 குழந்தைகளில் மூத்த குழந்தையாக இருந்து சின்னஞ்சிறு வயதிலேயே வாழ்க்கைப் பொறுப்புகளைச் சுமந்துகொண்டு தன் சகோதரர்களுக்கு கல்வியூட்டி க.பொ.த.ப உயர் வகுப்பைத் தானும் சித்தியெய்தி வாழ்க்கைப் படியில்முதல் படியைத் தாண்டியவர் நாராணபிள்ளை புஷ்பாகரன்.

ஆலயப் பணியை மனதார ஏற்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் கணக்குலிகிதராக இருந்த இவர் தன் 28 வது வயதுக்குள்ளேயே அன்பாலும்,அறிவாலும், பண்பாலும் பல இடங்களிலும் பலரது அன்பைப் பெற்று இலட்சிய வாழ்க்கை வாழ்ந்து வந்த ஒரு நற்றமிழ் இளைஞன்' அவர்.

வேண்டியகல்வித்தகைமையிருந்தும் எவர் தயவையும நாடாது சுயமுயற்சியால் தன் உடன் பிறப்புக்களைப் படிக்க வைக்க அவர்களின் வாழ்வை உயர வைக்க யாழ்.நகரில் பல ஸ்தாபனங்களில் பணியாற்றினுர்.

எதையும் தாங்கும் இதயம் கொண்ட இவர் வாழ்க்கையில் சோதனைகள் பல வந்த போதும் சிரித்த முகத்துடனே அவற்றை அணுகிப் பழக்கப்பட்டவர்.யாழ் நகரில் இடம் பெற்ற ஊரடங்கு உத்தரவு காலங்களில் தான் உண்ணுமல் ஆதாவற்றவர்களுக்கு உணவு வழங்கி ஆதரித்த சம்பவங்களை இன்றும் நினைக்காமல் இருக்க முடியவில்லை. எந்தப் பொது சேவையிலும் பின் நிற்காது மற்றவர்களுடன்முன் நின்று பணியாற்றும் பண்பு இவரிடம் தாராளமாக இருந்தது.

தான் வாழாவிடினும் தன் சகோதரிகள் சிறப்பாக வாழ வேண்டும் என்ற இலட்சிய வேட்கை கொண்டிருநத இவர் அசையாத இறை நம்பிக்கையுடனும் வாழ்ந்த ஒரு குடும்ப விளக்காகும்

இந்த இலட்சியப் பயணத்திலேயே தன் உயிரையும் இழந்தது எல்லோரது வயிற்றிலும நெருப்பைக் கொட்டுவதாக அமைந்து விட்டது.

தன் சகோதரி ஒருவரை, பரீட்சை ஒன்றுக்கு அனுப்புவதற்காக ஏற்பட்ட செலவைக் கொடுப்பதற்கு அயல் கிராமமான அனலைதீவுக்குச் சென்று பணத்துடன் திரும்பியபோது தன் பிறந்த மண்ணுன நயினைக் கரையில் இப்படி ஒரு நிலை தனக்கு ஏற்படும் என்று எள்ளளவுதானும் நினைத்திராத அந்தப் பால் போன்ற உள்ளம் கரை சேருகையில் துடிதுடித்த இப்பரிதாப நிலையை நினைக்கவே முடியவில்லை. நயினை அம்பாளுக்குச் சேவையாற்றி தொண்டருகைத்தன்னை அற்பணித்த புஷ்பாவின் ஆத்மா சாந்தியடைய அன்னை நாக பூஷணியை வேண்டுகின்றேம்.

சக்திபாலன்,
மண்டைதீவு.

# இன்றைய பலன்!

மாதம்- பங்குனி
திகதி- 8(1986-3-21)
கிழமை- வெள்ளி
திதி- தசமி மு. ப. வரை
நட்சத்திரம், பூசம் முழுநாளும்

மேடம்: எக்கருமததிலும எண்ணித்துணிக. அவசரப் போக்கினுல் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும் நிதானம் வேண்டும்.

இடபம்; வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழிற்றுறையில் புதிய வெற்றிகள்கிடைக்கும். இன்று சுபதினம்.

மிதுனம்: அதிகாரக் குறைவிற்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவோர் அதிக கவனம் செலுத்தவும். அவசர நடவடிக்கைகளைத் தவிர்க்கவும்.

கடகம்: குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம் மனதில் விரக்திநிலை தென்படும். அமைதி வேண்டும்.

சிங்கம்; இதயப்படுதாவில் இன்பக்கூத்து வாழ்க்கையில் நல்லகாரியங்கள் நிறைந்ததாக இருக்கும். நுட்பமான வேலையில் ஈடுபடுவோர் போற்றப்படுவர்.

கன்னி: உறவுமுறைகளில் பிளவுளே தென்படும். மனதில் உற்சாகம் குன்றும். இனத்தவர்களுடன் பகைத்துக் கொள்வீர்கள்.

துலாம்: வாகனச் சொந்தக்காரருக்குச் சிறப்பான தினம் ஆசிரியர் வாழ்க்கையில் போற்றப்படுவர். கல்வித்துறையில முன்னேற்றமுண்டு.

விருச்சிகம்: புத்திரவழியால் புகழுக்கிடமுண்டு. புதுமையில் நாட்டமும் புதுத் தொழில் விருத்திக்கும் இடமுண்டாம்.

தனுசு: சினேகித வழியால் சிக்கல்களுக்கிடமுண்டு அதிக நம்பிக்கை வைப்பதால் ஆபத்துக்கள் ஏற்படலாம். இன்று அவதானம் வேண்டும்.

மகரம்: கனிவான சம்பவங்கள் இடம்பெறும். காதலர்களுக்கு கனகுஷியான தினம். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறும்.

கும்பம்: ஏக்கத்தின சாயல் தாக்கும். எதிர்பாராதவிதமாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். நிதானம் வேண்டும்.

மீனம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர் உதவக்கு வருவர். புண்ணிய விருப்பும் மேலிடும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கொற்றுவத்தை ச ச. நிலையம்

கொற்றுவத்தை பூமகள் சனசமூக சேவா நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, பின்வருவோர் புதிய வருட நிர்வாகிகளாகத் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: து. தங்கவேலாயுதம், உபதலைவர்: சி. மகேந்திரன், செயலாளர்: இ. திருததணிகாசலம், உபசெயலாளர் ஆ. ஆனந்தராஜா, ஆசிரியர் மு. வன்னியசிங்கம் கணக்காய்வாளராகத் தெரிவு செய்யப்பட்டார், (வி

## புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை எழிலூர் சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் திரு. ஜே எம். தேவதாஸ் தலைமையில் கூடிய போது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர்: வி. பெனடிக்ற். உப- தலைவர்; கா. தேவதாஸ் செயலாளர்: இ. அன்ரன் விமலநாதன், உப- செயலாளர்: ஜெ, ஜான்சன், பொருளாளர்: ம. குணரட்ணம்,

சனசமூக நிலைய அங்கத்தவர்களைக்கொண்ட விழிப்புக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## தவக்காலச் சிந்தனை



31-ம் நாள்

"என் துன்ப வேளையில் நான் ஆண்டவரை அழைத்தேன். அவர் என் மன்றாட்டைக் கேட்டருளினுர்'' என சங்கீத ஆசிரியர் கூறுகிறுர் திக்கற்றவர்களை ஆண்டவர் காப்பாற்றுகிறர் அவர்களைத் துன்புறுத்துவோரை இடறி விழச் செய்கிறர் இதனைத் தான் புனித மரியாளும் ''வலியோரை அரியணையிலிருந்து அகற்றி தாழ்ந்தோரை உயர்த்துவார்''எனப் பாடினுள்.

மனித வரலாற்றிலேயே எதிர்பாராத நோக்கிலேஆண்டவன் குறுக்கிடுகிறுன். எதிர்பாராதவிதமாக மாற்றங்களை உருவாக்குகிறுன். திகிலும் துயரமும் நிறைந்த வாழ்வு தான் எமது சொத்து என நாம் ஒடிந்து துவண்டுபோகத் தேவையில்லை. நாம் எதிர்பாராத நேரத்தில எதிர்பாராதவிதத்தில் நம்மை மீட்கும் பணி இறைவனுல் நமக்கு அருளபபடும.

இயேசு தமது பகிரங்க வாழ்வின்போது தம் வல்லமையுள்ள செயல்களால் மக்கள் தம்மில் விசுவாசம்கொள்ளச் செய்தார். சமூகத்தில் ஒதுக்கப்பட்டோர் புறக்கணிக்கப் பட்டோர் ஏழைகள், வறியவர்கள், நோயாளிகள் மீது அதிக நன்மைகளும் புதுமைகளும் செய்து அவர்களுக்கு கருணை காட்டினுர் ஆண்டவனின் இரக்கமும் அன்பும் இத் தகையோருக்கே கிடைக்கும் எனத் தெளிவுபடுத்தினுர் எனவே நாமும் எமது இக்கட்டான காலகட்டததில் ஆண்டவன் துணையை எதிர்பார்க்கலாம் அவரது துணைக்கரம் நம்மைக்காத்து வழிநடத்தும்.

அருட்திரு.
இ.ஜே. அருமைநாயகம்

# கவிதை வளம் கொழிக்கும் ஜார்ஜியா ஓராண்டில் 2500 நூல்கள் வெளியீடு!

(திபிலிசி)

சோவியத் நாட்டின் 15 குடியரசுகளில் ஒன்று, ஜார்ஜியா, ஜார்ஜியா மொழிக் கவிதைகளை 17 தொகுப்புக்களாக வெளியிடும் பணி, அண்மையில் முடிவடைந்தது. கி.பி ஐந்தாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து ஜார்ஜியா கவிதையினைவரலாற்றை இத்தொகுப்புக்கள் பிரதிபலிக்கின்றன.

''புலித்தோல் போர்த்த மனிதன்'' என்னும் கவிதை ஒரு தனித்தொகுப்பாக வெளியிடப் பெற்றுள்ளது. 12-ம் நூற்றுண்டைச் சேர்ந்த ஷோடா ரூஸ்தாவெலி, இதன் ஆசிரியர், உலக இலக்கியத்தில் மறுமலர்ச்சிக் கருத்துக்களை முதன் முதலில்விதைத்தவர்களில இவரும் ஒருவர்.

50 லட்சம் மக்கட் தொகையைக் கொண்ட ஜார்ஜியா குடியரசில், ஆண்டுதோறும் 2500 நூல்கள் பல்லாயிரம் பிரதிகளாக வெளியிடப்படுகின்றன: இவற்றில் பாதி, கவிதை நூல்களாகும்.

# "தமிழ்மக்களை ஒழிக்க அரசு தீட்டிய திட்டமே இப்போதைய முடிவு!"
## 'ரெலி' அறிக்கை

[யாழ்ப்பாணம்]

தற்போது தமிழ் பிரதேசங்களில் அரசு திட்டமிட்டு நடாத்தி வரும் படுகொலைகள் கொள்ளைசள் தமிழினத்தைப் பூண்டோடு ஒழிக்கும் திட்டமென்றே கருத வேண்டும்''

இவ்வாறு தமிழீழ விடுதலைத் தீவிரவாதிகள் (ரெலி) இயக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது தமிழ்ப் பிரதேசங்களில் இடம் பெற்று வரும் வாகனக் கடத்தல், கொள்ளைகள் என்பவற்றைச் சிந்திப்போமேயானுல் எம்மை நாமே அழிப்பது போன்றே தோன்றுகிறது. எமது இயக்கப் பெயரைச் சொல்லி நடைபெறும் கொள்ளைக்கும் வாகனக்கடத்தலுக்கும் எமக்கும் எதுவித தொடர்புமில்லை இதற்குப் பக்கபலமாக மக்களோடு மக்களாக நின்று இவர்களை அம்பலப்படுத்துவோம்.

மலையக மக்களின் விடிவிற்காகவும் தமிழினத்தின் விடிவிற்காகவும் போராட்டம் என்பது அவசியம் என்று எண்ணி மலையகத்தில் மெருமளவில் நிலை கொண்டுள்ளோம். தமிழ் ஈழ விடுதலைக்கு அணிவேராக நீங்கள் நல்கும் நிதியே விடுதலையை வென்றெடுக்கும் குண்டுகளாகும்'' (ஐ)

## நிர்வாகிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப் பிரஜைகள் குழுவின் பரந்தன் கிராமசேவையாளர் பிரிவுக் கிளை நிர்வாகிகள் தெரிவு திரு. கி றே சவேசியஸ் தலைமையில் பரந்தன் இந்துமகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

புதிய கிளைத் தலைவராகக் கரைச்சி லயன்ஸ் கழகத் தலைவர் திரு. ஆ. பாலேந்திரன் தெரிவானுர். உப தலைவர்களாக வி. ரி. சிவலிங்கமும், ம. பத்மநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். செயலாளராக என் நாகேந்திராவும், உப- செயலாளராக எஸ். சிவகுருநாதனும், பொருளாளராக சி சந்தசாமியும், உபபொருளாளராக ந ஜனுர்த்தனராஜனும், கணக்காய்வாளராக எ வி துரைராஜாவும் தெர்வானுர்கள்.

## ரூபவாஹினி

மாலை:
5-00 செய்திகள்
5-05 பாடசாலை விஞ்ஞானம்
2-20 கார்ட்டூன் சித்திரம்
6-00 'யப்பானில் இயற்கை' (விவரணம்)
6-20 செய்திகள் (தமிழ்)
6-55 'சாரங்கி' (கலை, கலாசார நிகழ்ச்சி)
7-25 'குரங்கு'
8-00 செய்திகள் (சிங்களம்)
8-20 குரங்கு (தொடர்ச்சி)
8-45 'யொவுன்புர - 86' (விவரணம்)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-25 'டேட்லைன்' (நடப்பு நிகழ்ச்சி
9-45 வார இறுதித் திரைப்படம் 'திஸ் புறொப்பர்ட்டி இன் கண்டெம்ன்ட்'
11-35 ஒளிபரப்பு முடிவு

## ஆலய உற்சவம்

(பண்டத்தரிப்பு)

பண்ணகம் விசவத்தனை முருகமூர்த்திகோவில் வருடாந்த உற்சவம்கடந்த 15ம் தகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 24ம் திகதி தேர் உற்சவமும் அடுத்த நள்தீர்த்ளது தீர்த்த உற்சவத்தில் த உற்சவமும் நடைபெறவுள்ளது நண்பகல்அன்னதானமும் இடம்பெறுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றுஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்- கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கற்கை நெறிகளாக ஆங்கிலத்தட்டச்சு சுருக்கெழுத்து, உடைதயாரித்தல் மோட்டார் பொறியியல் ஆகியன இன்று காலை தொழில் நுட்ப லட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ், சுப்பிரமணியத்தினுல் ஆரம்பித்து வைக்கப்படும். ஆறுமாதகாலத்துக்கு இப்பயிற்கி நெறி போதிக்கப்படும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆணைக்குழு

(கொழும்பு)

அரசியல் வாதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு ஜனுதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் திரு. பேர்ஸி கொலின்தோமே, திரு. பரிந்தாரணசிங்க, திரு எச் ம. தம்பையா ஆகியோரே ஆணைக்குழு உறுப்பினர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள்.

1977 ஜூலை 23 ம் திகதிக்குப்பின் அரசியல் வாதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருக்குக் எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப் படவுள்ளன. [பி]

# “இலங்கை இனப் பிரச்னை— உள்நாட்டு விவகாரம்; ஆயுத உதவி கிடையாது

## - சோவியத் ஸ்தானிகர்

(கொழும்பு)

“இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்பதே எமது விருப்பம். உலக பயங்கரவாதத்தை எமது நாடு வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளையில், எமது நட்பு நாடுகளின் இறைமையையும், ஒருமையையும் பாதுகாக்க நாம் ஆயுத உதவி வழங்கி வருகிறோம். ஆனல், இலங்கையிலுள்ள தீவிரவாதிகளுக்கு வேறுவழிகளிலிருந்து ஆயுதங்கள் கிடைக்கலாம், அதற்கும் எமக்கும் சம்பந்தம் இல்லை”.

கொழும்பில் நேற்று சோவியத் ஸ்தானிகர் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் ஸ்தானிகர் திரு.கே.என். கொல்மடோவ் மேற்கண்டவாறு கூறினர்.

“இலங்கையின் இன்றைய பிரச்னை ஒரு உள்நாட்டு விவகாரம். இதில் எப்பக்கத்துக்கும் எமது ஆதரவு இல்லை, இந்து சமுத்திரத்தை சமாதான மண்டலமாக்கும் முனைப்பில் கொழும்பில் ஒரு சர்வதேச மாநாட்டை நடாத்தும் பிரயத்தனத்தில் நாம் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளோம்” என்று சோவியத் ஸ்தானிகர் மேலும் கூறினர், (ஷ)

## மட்டுநகரில் 75 பேர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புநகரில் திடீர்ச் சோதனையில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படையினர் 75 பேரை கைது செய்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற இச் சம்பவத்தைத் தொடர்ந்து நகரில்பதற்றநிலை ஏற்பட்டது. (ய-மா)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் ஆதரவில் மறைந்த நாட்டியமேதை ருக்மணிதேவி அருண்டேலின் நினைவஞ்சலிக்கூட்டம் கைலாசபதி கலையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

## வவனியா தமிழ் விவசாயிகள் இம்சிக்கப்படுவதாக புகார்

(வவனியா)

வவனியாவில் தமிழ் விவசாயிகள் தீவிரவாதிகள் என்ற போர்வையில் இம்சிக்கப்படுவதாக வவனியா மாவட்ட விவசாயிகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக வவனியா அரச அதிபருக்கு, மேற்படி சங்கச்செயலாளர் திரு. எஸ் பத்மநாதன் அனுப்பிவைத்துள்ளதாவது:

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இப்பகுதி விவசாயிகள் தற்போது தமது வேளாண்மைகளை அறுவடைசெய்யத்தொடங்கியுள்ளனர். வயல்காவல் அறுவடை, சூடுமிதிப்பது போன்ற கடமைகளை செய்ய இயலாமல் விவசாயிகள் கஷ்டப்படுவதை தங்களுடைய கவனத்திற்கு அறிவித்துக் கொள்கின்றோம்.

“அண்மையில் நெடுச்சிமோட்டையில சாதாரண கமக்காரர்கள் கூலியாட்கள் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு இன்னமுப இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த வகையில் தமிழ் விவசாயிகள் தீவிரவாதிகள் என்ற போர்வையில் இம்சிக்கப்படுவதாகவே நாம் கருதவேண்டியுள்ளது.

“இப்படியான தேவையற்ற நடவடிக்கைகளை நிறுத்திசாதாரண மக்களைத் துன்புறுத்துவதைத் தவிர்க்க ஆவன செய்யும்படி இந்தச் சங்கம் அரச அதிபரைக் கேட்டுள்ளது”

இதன் பிரதிகள், வவனியா மாவட்ட இணைப்பதிகாரி, கலவான தொகுதி பாராளு மன்ற உறுப்பினர் திரு சரத் முத்தெட்டுவேகம ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## அறிக்கை

(சென்னை)

இலங்கையில் விமானத்தாக்குதல் தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றதேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் அறிவிப்பு தமிழர்களை முற்றாக ஒழித்துக்கட்டும் ஒரு சூழ்ச்சித்திட்டமே என்று ஈழதேசிய விடுதலை முன்னணி நேற்று சென்னையில் கூறியுள்ளது,

இலங்கை இனப்பிரச்னைக்கு “அரசியல் தீர்வு” காண்பதாக மீண்டும் மீண்டும் கூறுவதும் விமானத்தாக்குதலை தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவிப்பதும் இலங்கைக்கு எதிராக நிலவும் உலகின் கருத்தை மாற்றவும் அரசுக்கும் தமிழர் குழுக்களுக்குமிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் பாரத முயற்சிகளை குலைப்பதும் இலங்கையரசின் தற்போதைய குறிக்கோள் என்று ஈ தே வி. முன்னணிப் பிரதிநிதி திரு. பாலகுமார் கூறியுள்ளார். (ச)

## அனலைதீவு - எழுவைதீவு மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் அபாயம்!

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளில் கடந்த 17ம் திகதி முதல் ஏற்பட்டுள்ள போக்குவரத்துத் துண்டிப்பினுல் அப்பகுதிகளில் வாழும் சுமார் 5,000 மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கு உடனடியாக உணவுப்பொருட்களை அனுப்புமாறு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தை, அனலைதீவு பிரஜைகள் குழுத்தலைவர் திரு: வை. சிவராசா கேட்டுள்ளார்.

இதற்கிடையே படகு சேவை நடைபெருததினுல அப்பகுதிமக்கள் சொல்லொணுத்துன்பத்துக்காளாகிவருகிருர்கள்.

அனலைதீவில் கடமையாற்றிய ஒரேயொரு சுகாதார அதிகாரி மருந்துஎடுக்க யாழ்ப்பாணம் சென்றவர் பின்னர் திரும்பவில்லை இதனுல் அப்பகுதிமக்களின் அவசரதேவைகளுக்கு ஒருவைத்தியர் இல்லாமல் கஷ்டப்படுவதாக தெரியவருகிறது அங்குள்ள 2 பாடசாலைகளில் பணியாற்றும் சுமார் 15 ஆசிரியர்கள் அங்கு செல்லாததினுல் அங்கு பாடசாலைகளும் நடைபெறவில்லை.

## 27ல் தீவட்டி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பேசும் மக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடைபெறுவதை எதிர்த்து இம்மாதம் 27ம் திகதி தீவட்டி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துவதென்று அண்ணு தி. மு.க. மற்றும் 15 அமைப்புக்கள் முடிவு செய்துள்ளன

யாழ் நகர அண்ணு தி.மு.க. செயல்கத்தில் நடந்த இக் கூட்டத்தில் தீவட்டி ஊர்வலம் யாழ். சிவன் கோவிலடியில் ஆரம்பமாகி, பகாக்குவில் ஊடாக, நல்லூர்செல்வதென்றும் அன்றையதினம் பிற்பகல் 5 மணிக்கு ஊர்வலத்தைஆரம்பிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. (க)

## நீர்வேலியில் கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வாய்க்கால்தரவைப் பிள்ளையார் கோவிலில் இம்மாதம் 25-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கணபதி ஹோமம் நிகழவுள்ளது. உலக சேமத்தை வேண்டி இந்த ஹோமம் நடத்தப்படுகிறது அன்று பெரியபுராணப் பூர்த்தியும், நண்பகல் அன்னதானமும் இடம்பெறும். இதற்கான ஒழுங்குகளை ஆலய தர்மகர்த்தாவும், பிரதம குருவுமான பிரமஸ்ரீ ஆ சந்திரசேகரக் குருக்கள் தொண்டர்களின் உதவியுடன் மேற்கொண்டுள்ளார்

## ஈழம்வாதிகளின் வருமானவரித் திணைக்களம்!

### பாராளுமன்றத்தில் லக்ஷ்மன் ஜெயக்கொடி

[கொழும்பு]

“இந் நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இயங்கிவருகின்றனவா? ஈழம்வாதிகள்வடக்கில்தங்களுக்கென்றேசொந்தமாக, வருமானவரி திணைக்களமொன்றை ஆரம்பித்திருக்கிருர்கள்”

பாராளுமன்றத்தில் நேற்று அத்தனகல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி உரையாற்றுகையில் இவ்வாறு கூறினுர்

அவசரகாலநிலை நீடிப்பு சம்பந்தமான விவாதத்தில் பேசிய திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில்ஈழம்வாதிகள் வருமானவரித் திணைக்களத்திற்குள்புகுந்து அங்குள்ள கோவைகள் அனைத்தையும் எடுத்துச்சென்றுள்ளனர் அது மாத்திரமல்ல அந்தப்பகுதியில் வருமானவரிசெலுத்தும் சுமார் 6780 பேருக்கு வருமானவரி செலுத்தும்படி இறுதி (சிகப்பு) நோட்டிஸ் அனுப்பியுள்ளன. அத்துடன் 2,998 பேரிடமிருந்து வியாபார மொத்த வரியை, அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். இதன்மூலம் சுமார் இரண்டு கோடிரூபாவை வசூலிக்க அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். இப்படிப்பார்க்கும்போது ஈழம்வாதிகள் தங்களுக்கென்று சொந்தமாக வருமானவரித திணைக்களமொன்றை அவர்கள் ஆரம்பித்துள்ளதாகத் தெரிகிறது.

“இந்நாட்டின் நிதிஅமைச்சு என்ன செய்கிறது? இந்நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இயங்கிவருகின்றதா?

“வடக்குக் கிழக்குத் தமிழர்களின் சம்பியனுக அமைச்சர் தொண்டமான் இருக்கிருர். அமிர்தலிங்கத்தைவிட தொண்டமான் இன்று பயங்கரமானவராக இருக்கிருர்.

‘எம் ஒருவர் ஜீப் வண்டி ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பிவைத்திருக்கிருர். அந்த வாகனத்துக்கு இங்கேயும்(இலங்கையில்) ஒரு இலக்கத் தகடு இருக்கிறது. இந்தியாவிலும் ஒரு இலக்கத்தகடும் இருக்கிறது.

“தேசிய ஒருமைப்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ளும் போது பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிங்கள மொழியையே போதனுமொழியாகப் பாவிக்கவேண்டும். தமிழ் மொழியை அவர்கள் வீட்டில் பேசலாம்.

“மனித உரிமை மீறல் தொடர்பாக இந்தியா குறை கூறியிருக்கிறது. இதற்கு எதிராக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அவுஸ்திரேலியா, கனடா பிரிட்டன், அயர்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளும் மனித உரிமை மீறல் தொடர்பாக குறைகூறியிருந்ததை ‘வீரகேசரி’ பத்திரிகை வெளியிட்டு வந்தது. இலங்கைத்தமிழரோ அல்லது இந்தியாவோ எமக்கு அச்சுறுத்தலாக இல்லை. இ. தொ. காங்கிரசே அச்சுறுத்தலாக உள்ளது” என்ருர்.

## மரண அறிவித்தல்

### தி. சிவபாக்கியம்

திருநெல்வேலி கிழக்கு, அரசடி ஒழுங்கையைச் சேர்ந்த பொலிஸ் சரவணமுத்துவின் மகளும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் தில்லையம்பலத்தின் மனைவியுமாகிய சிவபாக்கியம் காலமானுர். ஈமக்கிரியைகள் நாளை (21- 3- 86) நண்பகல் திருநெல்வேலி செம்பாடு மயானத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இதைஏற்றுக்கொள்ளவும்

(C 1360)

### கந்தையா வரதராஜா

கந்தையா வரதராஜா இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தர் காலமானுர் இவர் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், ராஜகுமார்(நீர்ப்பாசன இலாகா.யாழ்ப்பாணம்), விஜயகுமார் (Saudi), சந்திரா, சித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன் (கூட்டுறவு வைத்தியசாலை, தெல்லிப்பளை) அவர்களின் மாமனுருமாவார். இவரின் பூதவுடல் பொன்னுலை குடும்ப மயானத்தில் 21- 3- 86 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும் தகவல்: ராஜ்குமார்.

பொன்னுலை, சுழிபுரம்.

(C 1358)

## பாக். கப்பல் கொழும்பு ..

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

முகங்களில் பாகிஸ்தான் மற்ற நாடுகட்கு வசதிஅளித்து வருவதும் இந்திய அரசுக்குத் தெரியும் இந்துமாகடலில் அமெரிக்க நடமாட்டம் அதிகரித்துவருகிறது கராச்சி துறைமுகத்திற்கு ‘என்ரபிறைஸ்’ சுப்பல்வந்த அதே நேரம் கொழும்புக்கு நல்லெண்ணப்பயணமாக இரண்டு பாகிஸ்தானிய கப்பல்கள் சென்றது கவலையளிக்கிறது.

மூன்ரும் நாடுகட்கு தளங்களையோ, வேறு இராணுவ வசதிகளையோ இருநாடுகளுமே கொடுக்கக்கூடாது என்று பாகிஸ்தானுக்கு இந்தியா யோசனை கூறியுள்ளது.

இத்தகைய வசதிகளை தாம் கொடுக்கவில்லை என்றும் எதிர்காலத்திலும் தாம் கொடுக்க மாட்டோம் என்றும் பாகிஸ்தான் உறுதிமொழி அளித்துள்ளது” என்றும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.